இலக்கு

வாரமிருமுறை மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 419

சனி, 28 நவம்பர், 2026 |

பக்கங்கள் 23

www.ilakku.org









தமிழர் தாயகத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் நினைவுகூரல்



மண்ணுக்காகவும் இனத்தின் விடிவிற்காகவும் தம் வாழ்வையே அர்ப்பணித்த மாவீரர்களை நினைவுகூரும் வகையில், தமிழர் தாயகப் பகுதிகள் முழுவதும் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (27) முன்னெடுக்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் கலந்துகொண்ட பொதுமக்கள், உயிர்நீத்த உறவுகள் குறித்தும் தமிழ் மக்களின் வரலாற்றுப் பாதை குறித்தும் தமது உணர்வுபூர்வமான கருத்துகளைப் பகிர்ந்துகொண்டனர்.

இது தொடர்பில் தமது எண்ணங்களைப் பகிர்ந்துகொண்ட உறவுகள், "வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்கள் மாத்திரம் இனத்திற்காகப் போராடவில்லை. இலங்கையின் 25 மாவட்டங்களில் 23 மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மண்ணின் விடுதலைக்காக இங்கு போராடியுள்ளனர். இதுமட்டுமன்றி, வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் இந்தியப் பிரஜைகள் எனப் பலரும் இம்மண்ணுக்காகப் போராடியுள்ளனர்" என்று தெரிவித்துள்ளனர்.

இதுதவிர, தமிழர் தாயகப் பகுதியில் உள்ள அனைத்து மாவீரர் துயிலுமில்லங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதேநேரம், இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட இடங்களிலும் சர்வதேச அளவிலும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் உள்ள மாவீரர் துயிலுமில்ல வளாகங்கள் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டதுடன், நுழைவாயில்களும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இந்நிலையில், நேற்று

தொடர்ச்சி: பக்கம் 21

ஐ.நா. தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகக் குற்றச்சாட்டு



இலங்கையின் உள்நாட்டுப் போர் வரலாற்றில், மனித உரிமைக் கோட்பாடுகளுக்கு அமைவான நடவடிக்கைகளை உறுதிசெய்வதில் ஐக்கிய நாடுகள் சபை தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பொதுமக்களைப் பாதுகாத்தல் மற்றும் முன்கூட்டிய எச்சரிக்கைகளுக்குப் பதிலளித்தல் ஆகிய விடயங்களிலும் ஐக்கிய நாடுகள் சபை தாமதமாகச் செயற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது நிகழ்ந்த மனித உரிமை

தொடர்ச்சி: பக்கம் 18

இந்திய – இலங்கை வெளியுறவு அமைச்சர்களுக்கு இடையே சந்திப்பு



இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்துடன், இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய நிலைமைகள் குறித்து பயனுள்ள கலந்துரையாடல்களை முன்னெடுத்ததாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திர விளிம்பு நாடுகளின் சங்க மாநாட்டில் பங்கேற்பதற்காக டெல்லி சென்றுள்ள இலங்கையின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கருக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய நிலைமைகள் குறித்து

தொடர்ச்சி: பக்கம் 21

போருக்கு தயாராகின்றது பிரித்தானியா



பனிப்போருக்குப் பிறகு முதன்முறையாக, பிரிட்டிஷ் இராணுவம் சுமார் 1,00,000 முன்னாள் படைவீரர்களைத் தொடர்புகொண்டு, அவர்களின் தொடர்பு விவரங்களையும், அவர்கள் பெற்றுள்ள சிவில் திறன் சார்ந்த தகவல்களையும் புதுப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது. தகுதியுடைய முன்னாள் படைவீரர்களுக்கு, நேட்டோ (NATO) பயிற்சிகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள விளக்கத்தில், இந்த முயற்சி தயார்நிலை மற்றும் தடுப்பாற்றலை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே தவிர, உடனடியாகப் படைகளைத் திரட்டும் திட்டம் ஏதுமில்லை என்று குறிப்பிட்டுள்ளது. தற்போது, பிரிட்டிஷ் இராணுவத்தின் எண்ணிக்கை 73,000 ஆகக் குறைந்துள்ளது; இது நெப்போலியப் போர்களுக்குப் பிந்தைய காலத்தின் மிகக் குறைந்த எண்ணிக்கையாகும்.

அதேசமயம், பின்லாந்தும் நார்வேயும் பால்டிக் கடலில் ரஷ்யாவுடனான ராணுவ மோதலைத் தவிர்க்க ரகசியமாக முயற்சித்துள்ளன. இது குறித்து 'தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்' செய்தி வெளியிட்டுள்ளது. அதன்படி, பின்லாந்து அதிபர் அலெக்சாண்டர் ஸ்டப் மற்றும் நார்வே பிரதமர் ஜோனாஸ் கார் ஸ்டோர் ஆகியோர், அக்டோபர் 27 அன்று புடினுடன் நேரடியாகப் பேசுவதற்கு முன்பாக, ரஷ்ய தொழிலதிபர் ஒருவரை இடைத்தரகராகப் பயன்படுத்தினர்.

நேட்டோ அமைப்புக்கு கடல்வழி முற்றுகையை ஏற்படுத்தும் எண்ணம் ஏதுமில்லை என்று அவர்கள் புடினிடம் உறுதிப்படுத்தினர். பால்டிக் பிராந்தியத்தில் தனது நலன்களைப் பாதுகாப்பதற்காக, முன்கூட்டியே அணு ஆயுதத்

தொடர்ச்சி: பக்கம் 18

ஈரானியத் தலைவர்களைக் கொல்வது குறித்து அமெரிக்காவில் விவாதம்



ஈரானுடனான போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாக, ஈரானியத் தலைமையை மீண்டும் குறிவைப்பது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் ஆலோசித்து வருவதாக என்.பி.சி நியூஸ் (NBC News) செய்தி வெளியிட்டுள்ளது.

பிப்ரவரி 28 அன்று ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து நடத்திய தாக்குதலின் முதல் நாளிலேயே, ஈரானின் உயர்மட்டத் தலைவரான அய துல்லா அலி காமேனி மற்றும் அவருக்கு நெருக்கமான பலர் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டனர். மோதலின் முதல் வாரங்களில் இத்தகைய தாக்குதல்கள் தொடர்ந்தன; காமேனியின் உதவியாளர் அலி லரிஜானி உட்பட பல அதிகாரிகள், தளபதிகள் மற்றும் முக்கிய விஞ்ஞானிகள் கொல்லப்பட்டனர்.

இருப்பினும், இந்தத் தாக்குதல்களால் ஈரானின் அதிகாரக் கட்டமைப்பைச் சீர் குலைக்க முடியவில்லை. அயதுல்லா அலி காமேனிக்கு பதிலாக அவரது மகன் மொஜ்தபா காமேனி புதிய உயர்மட்டத் தலைவராகப் பொறுப்பேற்றார்; மேலும், அந்த அரசாங்கத்திற்கு மக்கள் ஆதரவும் தொடர்ந்து கிடைத்தது.

ட்ரம்பின் குழுவில் உள்ள சிலர், இத்தகைய தாக்குதல்கள் ஈரானின் தலைமைப் பொறுப்பில் உள்ள தீவிரவாதப் போக்குடையவர்களை அகற்றும் என்றும், அவர்களுக்குப் பின் வருபவர்களுக்கு "அமெரிக்காவால் எப்போது வேண்டுமானாலும் உங்களைக் கண்டறிந்து கொல்ல முடியும்" என்ற எச்சரிக்கையை விடுக்கும் என்றும் வாதிடுகின்றனர். ஆனால், இந்த நடவடிக்கையை எதிர்ப்பவர்கள், இத்தகைய தீவிரமான நடவடிக்கைகள் போரை நீட்டிக்கவே செய்யும் என்று கவலை தெரிவிக்கின்றனர். இது ஈரானில் அதிகாரத்தில் இருப்பவர்களை இன்னும் உறுதியாக நிலைநிறுத்தவும், பேச்சுவார்த்தைகளின் போது அமெரிக்காவின் நம்பகத்தன்மையைக் குறைக்கவும் வழிவகுக்கும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரி மற்றும் இது குறித்து அறிந்த மற்றொரு நபர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சி மெட்டா மீது வழக்குத் தொடுத்துள்ளது



இந்தியாவின் எதிர்க்கட்சியான காங்கிரஸ், ஃபேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டா (Meta) மீது வழக்குத் தொடர்ந்துள்ளது. தனது கட்சியின் தலைவரான ராகுல் காந்தி இடம்பெற்ற பதிவுகளையும் படங்களையும், தானியங்கி உள்ளடக்க நீக்க அமைப்பு (automated content-removal system) நீக்கி வருவதாக அக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

டெல்லி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் உள்துறை அமைச்சகம் ஆகியவையும் எதிர் மனுதாரர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த சமூக ஊடக நிறுவனத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே கடந்த ஒரு வாரமாகவே மோதல் போக்கு நிலவி வருகிறது. தங்கள் கட்சியுடன் தொடர்புடைய பதிவுகளை மெட்டா நிறுவனம் நியாயமற்ற முறையில் நீக்குவதாகவோ அல்லது

தொடர்ச்சி: பக்கம் 21

இந்தியாவின் 'கரப்பான் பூச்சி' கட்சித் தலைவர்களுக்கு வெளிநாட்டுப் பயணக் கட்டுப்பாடு



இந்தியாவின் இளைஞர்களை உள்ளடக்கிய 'காக்ரோச் ஜனதா பார்ட்டி' (Cockroach Janta Party - CJP) அமைப்பின் மூன்று தலைவர்கள், கடந்த மாதம் நடத்தப்பட்ட அனுமதியற்ற போராட்டம் ஒன்றின் காரணமாக வெளிநாட்டுப் பயணக் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டுள்ளதாக வியாழக்கிழமை(26) வெளியான அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதி சூர்யா காந்த், வேலையில்லாத இளைஞர்கள் சிலரை 'கரப்பான் பூச்சிகள்' (cockroaches) என்று ஒப்பிட்டதைத் தொடர்ந்து, மே மாதம் ஒரு நையாண்டித்தனமான இணையப் பிரச்சாரமாக 'காக்ரோச் ஜனதா பார்ட்டி' (CJP) உருவானது. தேசிய நுழைவுத் தேர்வு வினாத்தாள்கள் கசிந்த விவகாரத்தில், இவர்களது போராட்டத்தின் விளைவாக மத்திய கல்வி அமைச்சர் பதவி விலக நேரிட்டது. இது

தொடர்ச்சி: பக்கம் 21

உல்லாச விடுதிகளின் வருமானத்திற்காகவா காணி விடுவிப்பு தாமதம்?



தமது பூர்வீக நிலங்களை மீட்டுத் தருமாறு கோரி, மயிலிட்டி மக்கள் முன்னெடுத்து வரும் காணி விடுவிப்புப் போராட்டம் 32ஆவது வாரமாகவும் வலிசுமந்த உணர்வுகளுடன் நேற்று வெள்ளிக்கிழமை (27) முன்னெடுக்கப்பட்டது.

மக்களின் வாழ்வாதாரத்திற்கும் எதிர்காலத்திற்கும் அடிப்படையாக விளங்கும் பூர்வீகக் காணிகள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில், குறித்த காணிப் பகுதிகளில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், சுற்றுலாத் துறை சார்ந்த பயன்பாடுகள் இடம்பெறுவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குறிப்பாக, தல்செவன உல்லாச விடுதியை அண்மித்துள்ள மக்களுக்குச் சொந்தமான காணிகளில் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், இராணுவப் பங்களா என்ற போர்வையில் அமைந்துள்ள பகுதிகளைச் சூழவுள்ள நிலங்களிலும் விவசாயச் செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் மக்கள் குற்றஞ் சாட்டுகின்றனர்.

மக்களின் காணிகள் அவர்களிடம் மீளக் கையளிக்கப்பட வேண்டிய நிலையில், அவை இராணுவத்தின் விவசாயத் தேவைகளுக்கும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இவ்வாறான பயன்பாடுகளே காணி விடுவிப்பில் தாமதம் ஏற்படுவதற்கான காரணங்களா என்பதையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும் என மக்கள் வலியுறுத்து கின்றனர்.

மேலும், கடற்கரையை அண்டிய மக்களின் பூர்வீக நிலங்களிலும் சுற்றுலாத்துறை சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக் கப்படுவதாகவும், சில பகுதிகள் சுற்றுலா இடங்களாகவும் உல்லாச விடுதிகளாகவும் பயன்படுத்தப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, மயிலிட்டி மக்களின் காணிகள் தொடர்பான உண்மை நிலையை ஆராய்ந்து, மக்களுக்குச் சொந்தமான காணிகளில் அனுமதியற்ற விவசாய மற்றும் வர்த்தக நடவடிக் கைகளைத் தடுத்து, துறைசார் அரச அதிகாரிகள், காணி ஆணையாளர் திணைக்களம், மனித உரிமைகள் தொடர்பான அமைப்புகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய கவனம் செலுத்த வேண்டும். மக்களின் காணிகளை அடையாளம் கண்டு, அவற்றை உரியவர்களிடம் மீளக் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன், 32 வாரங்களாகத் தொடரும் மக்களின் காத்திருப்புக்கு எப்போது முடிவு கிடைக்கும்? பூர்வீக நிலங்கள் மக்களுக்கா அல்லது வருமானம் ஈட்டும் வேறு நடவடிக்கைகளுக்கா? மயிலிட்டி மக்களின் இந்தக் கேள்விகளுக்கு உரிய தரப்பினர் பதிலளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் பெயரையே ஏற்காதவர்கள் எவ்வாறு இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடியும்?

“பாராளுமன்றத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பெயரை உச்சரிப்பதற்கே எதிர்ப்பு தெரிவிக்கும் உங்களால், இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வை வழங்க முடியும்?” என்று வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தின்போது உரையாற்றிய ரவிகரன், வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

இதன்போது, சபைக்குத் தலைமை தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் சாணக்க மாதுகொட, பிரபாகரனின் பெயரில் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பது தொடர்பில் நடவடிக்கை எடுக்கச் செயலாளர் குழுவிடம் முன்மொழிவதாகக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த ரவிகரன், தமிழ் மக்களின் மீதான வெறுப்பை வெளிப்படுத்தும் வகையிலேயே இத்தகைய எதிர்ப்புகள் அமைவதாகக் குறிப்பிட்டார்.

இனவாதம் இல்லை எனக் கூறும் ஆளும் தரப்பினர், பிரபாகரனின் பெயரைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தமிழ், சிங்களம், முஸ்லிம் மக்கள் சகோதரத்துவத்துடன் வாழும் நாட்டில், ஒரு பெயரை உச்சரிப்பதற்கே எதிர்ப்பு தெரிவிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு

தொடர்ச்சி: பக்கம் 18

ஆசிரியர் தலையங்கம் | 28 நவம்பர், 2026

அநுர அரசு ஆழ்நிலை அரசுவழி ஈழத்தமிழர் இறைமைக்குப் போடும் நாலு சட்ட முடிச்சுக்கள்

உரிய மாற்றத்தின் மூலம் நல்லிணக்கத்தை வளர்த்தல் என்கின்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் வாக்குறுதியைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே மீறி ஈழத்தமிழர்களின் இறைமையை சட்டவாக்கங்கள் மூலம் ஜே. ஆர். ஜயவர்த்தனா பாணியில் சட்டத்தால் கட்டிப்போடும் அரசியலை முன்னெடுத்து வருகின்றனர். இதற்குக் காரணம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது ஆட்சிக்கான பாதுகாப்பைக் கருதி படைத்துறையினர் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றிடம் முற்றுமுழுதாக சட்டவாக்கப் பொறுப்பை ஒப்படைத்துள்ளமையேயாகும் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

இந்தப் படைத்துறையினரும் சட்டமா அதிபர் திணைக்களமும்தான் ஈழத்தமிழர்களை பயங்கரவாதிகளாகவும் சட்டவிரோத சமூகமாகவும் கட்டமைப்பதையே தங்கள் மைய நோக்காகக் கொண்டவர்கள் இவர்களது பணியக ஆட்சிதான் இன்று சிறிலங்காவில் நடைமுறையில் உள்ளது என்பதும் இலக்கின் தெளிந்த முடிபாகவுள்ளது.

இலக்கின் இந்தக் கருத்துக்களை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் சிறிலங்காவின் சிங்கள ஆய்வாளர் முனைவர் ஜெகான் பெரேரா தேசிய மக்கள் சக்தியின் இன்றைய ஆட்சி படைத்துறைத் தலைமைகளினதும் சட்டமா அதிபர் திணைக்களத்திலும் நடைமுறையில் தங்கியிருப்பதை “ ஆழ்நிலை அரசு” (Deep State) என்று வரையறுக்கலாமெனத் தனது “முறைமை மாற்றத்துக்கான அமிலச் சோதனை” என்னும் வீரகேசரிக் கட்டுரையில் தெரிவித்துள்ளார். அதனைப் பின்வருமாறு அவர் மேலும் விளக்கியுள்ளார். “ ஆழ்நிலை அரசு தேர்தல்களுக்கு அப்பால் கொள்கைகளில் செல்வாக்குச் செலுத்தவும் - தன்னலங்களைப் பாதுகாக்கவும் - தவறுகளை மறைக்கவும் திரைமறைவில் இயங்கும் வேரூன்றியதும் பொறுப்புக் கூறல் கடப்பாடற்றதுமான அதிகார வலைப்பின்னலைக் குறிக்கும்” இந்தப் படைத்துறை சட்டத்துறைப் பணியக ஆட்சியாளர்களால் வரைவு செய்யப்பட்ட நான்கு சட்டங்களை அடுத்தடுத்து தனது பாராளுமன்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டு சட்டமாக்குவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயன்று வருகிறது. ஏற்கனவே தீர்மானமாக்கப்பட்டு சட்டவரைவு மொழிக்குக் கொண்டுவரப்பட்டுவிட்ட இச்சட்ட மூலங்கள் குறித்து இனி மக்களுடன் பேசப்போவதாக சிறிலங்கா அரசத்தலைவர் அநுரகுமர திசநாயக்கா கூறுவது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் செயற்பாடாகவே உள்ளது.

01. பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாத்தல் சட்டமூலம் 02. ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைத் தடுத்தல் சட்டமூலம். 03. அரசுசாரா நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டமூலத்திற்கான முன்மொழிவு 04. சிறிலங்கா ஊடக நிபுணர்கள் பட்டய நிறுவன சட்டமூலத்திற்கான முன்மொழிவு, என்பனவே பிரச்சினைக்குரியதாகவுள்ள நான்கு சட்டமூலங்களுமாகும்.

இவை நான்குமே தனித்தனிச் சட்டமூலங்களாக இருப்பினும் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீளுறுதிப்படுத்தலைத் தடுத்து ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்குதல் என்பதில் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன. பெயரளவில் முழு சிறிலங்கா மக்களுக்கும் என்று பேசப்பட்டாலும் இவற்றால் பாதிப்புகளைச் சந்திக்கப் போகின்றவர்கள் அரசியல் விழிப்புணர்ச்சியுள்ள ஈழத்தமிழர்களே என்பதற்கு இலங்கைத் தீவின் அரசியல் வரலாற்றுச் சான்றாதாரங்கள் நிறைய உள்ளன என்பதனை இலக்கு மீள்நினைவூட்ட விரும்புகிறது.

1979 இல் ஜே. ஆர். ஜயவர்த்தனா தற்காலிகச் சட்டமாகக் கொண்டு வந்து இன்று வரை 47 ஆண்டுகள் ஈழத்தமிழர்களிடையில் அவர்களுக்கு இலங்கைத் தீவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை உள்ள தொன்மையும் தொடர்ச்சியான இறைமையின் அடிப்படையில் அவர்கள் தங்கள் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளை மீளுறுதி செய்ய எடுக்கும் எத்தகைய செயற்பாடுகளையும் ஒழிக்க அவர்களை அழிக்கும் இனஅழிப்பை இனத்துடைப்பைப் பண்பாட்டு இனஅழிப்பை சட்டபூர்வமாக நிலைப்படுத்தி வருகிறது. இதனை நிரந்தரச் சட்டமாகவே மாற்றச் சிறிலங்காவின் படைத்துறையினரும் சட்டமா அதிபர் திணைக்களமும் இயற்றியுள்ள புதிய சட்டம்தான் பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கவென்று கொண்டு வரப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம். ஜே. ஆர். ஜெயவர்த்தனா பயங்கரவாதத்தடைச் சட்டத்தை அடுத்து 1983இல் 6வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தால் எவ்வாறு ஈழத்தமிழர்கள் தங்களின் வரலாற்றுத் தாயகத்தை தமது என்று பேசுவது கூடப் பிரிவினை என வரையறுத்ததோ அவ்வாறே இந்தச் சட்டமும் ஈழத்தமிழர்கள் தங்கள் வரலாற்றுத் தாயகம் தேசியம் தன்னாட்சி என்று சிந்தித்தாலே அதனையும் சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் எதிரான பயங்கரவாதக் குற்றச் செயலாகப் பிரகடனப்படுத்தும் பேராபத்தைக் கொண்டுள்ளது. இது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பில் இலங்கைத் தீவின் தேச இனமாகவும் நவீன அரசியலில் யாழ்ப்பாண வன்னி அரசின் குடிகளாகவும் உலகு கண்டுகொண்ட ஈழத்தமிழர்களை சமூகம் (community) என புதிய வரைவினை உருவாக்கி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் உருவாக்கிய ‘சிறுபான்மை இனம்’ என்கிற தவறான வரைவிலக்கணம் அளிக்கும் பாதுகாப்புகளைக் கூட நீக்கி சிறிலங்கா அரசிலுள்ள அரசியல் உரிமையற்ற சமூகமாக மாற்ற முயல்வதன் வழி தோன்றக் கூடிய ஈழத்தமிழரின் ஜென்சி அல்பா தலைமுறையினரின் சனநாயக எதிர்ப்புக்களை ஒடுக்குவதற்கான இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்துவதற்கான போரியல் உத்தியாகவே அமைகிறது என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

இந்நிலையில் அனைத்துலக இனமாக இன்று புலம்பெயர்ந்து வாழும் புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகளாவிய நிலையில் தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசியலமைப்பு தங்களின் பூர்வீகத் தாயகத்தையும் மக்களையும் அடிமைப்படுத்துவதற்கு தோற்றுவிக்கக் கூடிய அனைத்துலக மட்டத்திலான சனநாயக எதிர்விளைவுகளை சிறிலங்கா என்னும் அரசுக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களாகப் பிரகடனப்படுத்தி அதனைத் தடுப்பதற்கான அனைத்துலக கைது ஆணைகளை பிறப்பிப்பதற்கான உத்தியாகவே இரண்டாவது சட்டமூலமான “ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைத் தடுத்தல் சட்டமூலம்.” உள்ளது.

அத்துடன் சிறிலங்காவின் இனஅழிப்பால் பாதிக்கப்பட்டு தங்கள் உயிரையும் உடைமைகளையும் நாளாந்த வாழ்வையும் பாதுகாக்க இயலாமல் தவிக்கும் தாயக ஈழத்தமிழர்களுக்கு அனைத்துலக இனமாக உள்ள ஈழத்தமிழர்கள் நிதியும் மதியும் அளித்து அவர்களைப் புனர்வாழ்வு பெறச் செய்வதை எல்லைப்படுத்தும் அல்லது தடுக்கும் சட்டமாகவே அரசுசாரா நிறுவனங்கள் (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்) சட்டமூலத்திற்கான முன்மொழிவு உள்ளது.

இந்நிலையில் தாயகத்திலும் அனைத்துலகிலும் ஈழத்தமிழர்கள் வானலைகள் இணையவெளிகள் மெய்நிகர் வெளிகள் வழி இனத்துவ மொழித்துவ பண்பாட்டு நிலை உறவுகளை வளர்த்துக்கொள்வதைத் தடுக்கவும் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்களுக்கான அனைத்துலக மனித உரிமைகள் குரலாக செயற்படுவதைத் தடுக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆழ்நிலை அரசின் செயற்பாடுதான் நான்காவது சட்ட முன்மொழிவான சிறிலங்கா ஊடக நிபுணர்கள் பட்டய நிறுவன சட்டமூலத்திற்கான முன்மொழிவு,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இந்த ஆழ்நிலை அரசின் செயற்பாடுகள் போட்டுள்ள போட முற்படும் இந்த ஈழத்தமிழர் இறைமையான நான்கு சட்ட முடிச்சுக்களின் நுணுக்கமான சட்ட இனஅழிப்பு முயற்சிகளிலிருந்து ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கும் வலிமை அனைத்துலக இனமாகவுள்ள ஈழத்தமிழர்களின் ஒருமைப்பாட்டில் (integrity) தான் உள்ளது என்பது இலக்கின் தெளிந்த முடிபு. ஒருமைப்பாடு என்பது உள்ளத் தளவில் உண்மைகளின் அடிப்படையில் இணைந்து அதனை நிலைப்படுத்தச் செயற்படுத்த எடுக்கும் உள்ள உறுதி. இந்த ஒருமைப்பாட்டு உணர்வுதான் மாறுபாடுகளை மதித்து (Value the diversity) சமூக விலக்குகளை (Social exclusion) சமூக உள்வாங்கல்களாக (Social inclusion) மாற்றிச் செயலுக்கான ஒற்றுமையை (Unity) நடைமுறைப்படுத்தும். மேற்குலக அரசியலில் இதனை பொதுநன்மை (Common Good) எனக் கூறி அந்தப் பொதுநன்மை கருதிய செயலில் விருப்பக் கூட்டணியாக (Coalition of the Willingness) அவரவர்களுடைய மற்றைய வேறுபாடுகள் மாறுபாடுகள் நடுவிலும், இணைந்து செயற்படுவதற்கான செயலணிகளை உருவாக்க உதவும். இதுவே இன்று உக்ரேனுக்கு உதவும் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகிய பிரித்தானியா அதனுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறையாக உள்ளது. இத்தகைய ஒரு விருப்பக் கூட்டணியாக (Coalition of the Willingness) ஆவது அனைத்துலக இனமாக உள்ள ஈழத்தமிழினம் இணைந்து செயற்படாவிட்டால் அநுர அரசின் ஆழ்நிலை அரசு ஈழத்தமிழர்களின் இறைமைக்கு போடும் நாலு முடிச்சை அவிழ்க்க இயலாத நிலையே நடைமுறையாகும் என்ற எச்சரிப்பை இலக்கு அழுத்திக் கூற விரும்புகிறது.

ஆசிரியர்



மட்டக்களப்பு தரவை



மட்டக்களப்பு மாவடிமுன்மாரி



மட்டக்களப்பு வந்தாறுமூலை



மன்னார் பண்டிவிரிச்சான்



மன்னார் ஆட்காட்டிவெளி



முல்லைத்தீவு அளம்பில்



முல்லைத்தீவு கடற்கரை







புதுக்குடியிருப்பு இரணைப்பாலை






விசுவமடு தேராவில்






கிளிநொச்சி கனகபுரம்










கோப்பாய்






உடுத்துறை






யாழ். பல்கலைக்கழகம்






யாழ். தீவகம், சாட்டி






விசுவமடு தேராவில்






வவுனியா குறுமன்காடு






தமிழீழத்தின் நடைபெற்ற மாவீரர் நாள் 2026 நினைவுக்களின் தொகுப்பாக...














தமிழீழத்தின் நடைபெற்ற மாவீரர் நாள் நினைவுக்களின் தொகுப்பாக...














கிளிநொச்சிக் காட்டில் விடுதலைப்புலிகளின் தளம் அமைந்திருந்த 'அன்பு' தளத்தில் உள்ள மாவீரர் நினைவுத் தூபிக்கு மக்கள் அஞ்சலி செலுத்தி நினைவேந்தலில் ஈடுபட்டனர்.






இந்தியா தமிழகத்தில் மாவீரர் நாள் நினைவுக்களின் தொகுப்பாக...

















‘நான் பலமுறை இறந்தேன்’

அறிக்கையின் பரிந்துரைகள்

இலங்கைக்கு மட்டுமானதல்ல:

ஐ.நா.வுக்குமானது தான்

விதுரன்

இலங்கையின் ஆயுத மோதல் முடிவடைந்து பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், போரின்போதும் அதற்குப் பின்னரும் நிகழ்த்தப்பட்ட பாரதூரமான மனித உரிமை மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களுக்குப் பொறுப்புக்கூறும் விடயத்தில் அரசு தொடர்ந்தும் பின்வாங்கும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

சர்வதேச சமூகத்திடமும் ஐக்கிய நாடுகள் சபையிடமும் ஒத்துழைப்பு வழங்குவதாகத் தொடர்ச்சியாக வாக்குறுதி களை அள்ளிவீசும் இலங்கை அரசாங்கங்கள், அந்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித உண் மையான அக்கறையையும் காட்டவில்லை என்பது மீண்டும் ஒருமுறை நிரூபணமாகியுள்ளது.



2026ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வெளியிட்டுள்ள இரண்டு முக்கியமான ஆய்வு அறிக்கைகள், இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ள தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாசாரத்தையும், குற்றமிழைத்தவர்களைப் பாதுகாக்கும் அரச பொறிமுறையின் உண்மை முகத்தையும் சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தியுள்ளன.

கடந்த ஜனவரி 13ஆம் திகதி, ‘இலங்கையில் மோதல்களுடன் தொடர்புடைய பாலியல் வன்முறைக்கான பொறுப்புக்கூறல் – நாம் எல்லாவற்றையும் இழந்துவிட்டோம்; நீதிக்கான நம்பிக்கையையும் கூட’ என்ற தலைப்பில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் தனது முதலாவது அறிக்கையை வெளியிட்டது.

ஆயுத மோதலின்போதும் அதற்குப் பின்னரான காலப்பகுதியிலும் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்முறைகள் எதேச்சையாக நடந்த தனித்தனிச் சம்பவங்கள் அல்ல என்றும், அவை திட்டமிடப்பட்ட, பரந்து பட்ட மற்றும் அமைப்புசார்ந்த மீறல்களின் ஒரு வடிவமாகவே முன்னெடுக்கப்பட்டன என்றும் அந்த அறிக்கை திட்ட வட்டமாகப் பதிவு செய்தது.

குறிப்பாக, தமிழின அழிப்புக்கான ஒரு கருவியாகப் பாலியல் வன்முறை பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்ற பாரதூரமான உண்மையை அந்த அறிக்கை வெளிச் சத்திற்குக் கொண்டுவந்ததுடன், இவை போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்பாக வகைப்படுத்தப்படக்கூடியவை எனவும் சுட்டிக் காட்டியது.

ஆனால், இந்த அறிக்கைக்கு உடனடியாக எவ்விதப் பதிலையும் அளிக்காத இலங்கை அரசாங்கம், செப்டெம்பர் மாத மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது ஐ.நாவின் கண்டறிதல்களையும் பொறுப்புக்கூறல் பரிந்துரைகளையும் முற்றாக நிராகரித்ததாகப் பிரதி மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் அவா டாபோ தெரிவித்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக, நவம்பர் 26ஆம் திகதி, ‘நான் பலமுறை இறந்தேன் – இலங்கையில் மனிதாபிமான உதவிகள் மீதான தாக்குதல்கள் – 20 ஆண்டுகளுக்குப் பிறகு’ என்ற தலைப்பிலான 40 பக்கங்களைக் கொண்ட இரண்டாவது ஆய்வறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

2006 முதல் 2009 மே வரையான காலப்பகுதியில் மனிதாபிமானப் பணியாளர்கள், மருத்துவ நிலையங்கள் மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் போரின் தற்செயலான விளைவுகள் அல்ல; மாறாக, பொதுமக்களின் துயரங்களை மேலும் தீவிரப் படுத்தி, உயிர்காக்கும் உதவிகளை மறுப்பதற்கான ஒரு தொடர்ச்சியான போக்கின் பகுதியாகவே அமைந்திருந்தன என்பதை இந்த அறிக்கை ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளது.

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிகளில் மூன்று இலட்சத்து முப்பதாயிரம் வரை யான பொதுமக்கள் தங்கியிருந்ததை நன்கறிந்திருந்தும், வெறும் எழுபதாயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் மட்டுமே இருப்பதாகக் குறைத்துக் கணக்குக் காட்டி, உணவு மற்றும் மருந்து விநியோகத்தைத் தடுத்து, பட்டினியை ஒரு போராயுதமாக அரசாங்கம் பயன்படுத்தியதை இந்த அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.



மேலும், 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு மாதமும் குறைந்தது ஒரு மனிதாபிமானப் பணியாளராவது கொல்லப்பட்டார் அல்லது வலுக்கட்டாய மாகக் காணாமல் ஆக்கப்பட்டார் என்பதும், அரசாங்கம் அறிவித்த போர் தவிர்ப்பு வலயங்களுக்கு வெளியில் இயங்கிய மருத்துவமனைகள்கூட சட்டபூர்வமான இலக்கு களே என்று அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டா பய ராஜபக்ஷ பகிரங்கமாகக் கூறியதும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டமை, மூதூரில் ‘பட்டினிக்கு எதிரான அமைப்பு’ பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை, ஐ.நாவின் 11ஆவது நிவாரணத் தொடரணி மற்றும் புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீதான எறிகணைத் தாக்குதல்கள் ஆகியவை குறித்து இதுவரை எந்தவொரு தனிநபரும் குற்றவியல் ரீதியாகப் பொறுப்புக்கூற வைக் கப்படவில்லை. மாறாக, விசாரணைகள் திட்டமிட்டு மூடிமறைக்கப்பட்டு, பயனற்ற விசாரணை ஆணைக் குழுக்கள் மூலம் காலத்தை இழுத்தடித்துக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையே அரசாங்கக் கட்டமைப்பால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்தின் மௌனம் இந்த விவகாரத்தில் மிகவும் அதிர்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளது. 2026 செப்டெம்பர் 24ஆம் திகதி, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் 27 கேள்விகளைக் கொண்ட பட்டியலை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்து, விசாரணைக் கோப்புகள், நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் ஆணைக்குழு அறிக்கைகளை வழங்குமாறு கோரியிருந்தது.

பின்னர், நவம்பர் 3ஆம் திகதி அறிக்கையின் முன்கூட்டிய பிரதியை அனுப்பி, நவம்பர் 13ஆம் திகதிக்குள் பதிலளிக்குமாறு நினைவூட்டியபோதும், அறிக்கை வெளி யிடப்படும் வரை அரசாங்கத்திடமிருந்து எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை.

மாற்றம், வெளிப்படைத்தன்மை மற்றும் புதிய அரசியல் கலாசாரம் குறித்துப் பேசும் தற்போதைய அரசாங்கமும், போர்க்கால மீறல்கள் மற்றும் கட்டளை அதிகாரிகளின் பொறுப்புக்கூறல் என்று வரும்போது, முன்னைய ஆட்சியாளர்களின் அதே மௌனத்தையும் தட்டிக்கழிக்கும் தந்திரத்தையுமே கையாள்கிறது என்பதை இது அம்பலப்படுத்துகின்றது.

1994ஆம் ஆண்டு ஐ.நா. பணியாளர்களின் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ள இலங்கை, தனது சர்வதேசச் சட்டக் கடமைகளிலிருந்து இவ்வாறு தப்பிக்க முடியாது.



சர்வதேசச் சட்டத்தின் கீழ், இத்தகைய பாரதூரமான குற்றங்களுக்கான பொறுப்பு என்பது அவற்றை நேரில் நிறைவேற்றியவர்களுடன் மட்டும் நின்றுவிடாமல், ஆணை யிட்டவர்கள், தூண்டியவர்கள், உடந்தையாக இருந்தவர்கள் மற்றும் தமது கீழ் பணியாற்றுபவர்கள் இத்தகைய குற்றங் களைப் புரிகிறார்கள் என்பதை அறிந்திருந்தும் அவற்றைத் தடுக்கவோ தண்டிக்கவோ தவறிய உயர் கட்டளை அதிகாரிகளையும் உள்ளடக்கும் என்று ஐ.நா. அறிக்கை தெளிவாக எச்சரித்துள்ளது.

இலங்கையில் நிலவும் இந்தத் தண்டனையற்ற நிலை, இன்று ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம், சூடான், தெற்கு சூடான், உக்ரைன் மற்றும் கொங்கோ ஜனநாய கக் குடியரசு ஆகிய நாடுகளில் மனிதாபிமானப் பணி யாளர்கள் கொல்லப்படுவதற்கும் மருத்துவமனைகள் தாக் கப்படுவதற்கும் ஒரு துணிச்சலான முன்னுதாரணமாக அமைந்துவிட்டதாக ஐ.நா. சுட்டிக்காட்டுகின்றது.

2023 முதல் 2025 வரையான காலப்பகுதியில் உலகளவில் 1,010இற்கும் மேற்பட்ட மனிதாபிமானப் பணி யாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது இந்த ஆபத்தின் தீவிரத்தை உணர்த்துகின்றது. ஆகவே, இந்த விடயத்தில் ஐ.நா. தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக அறிவித்துள் ளமை வரவேற்கத்தக்கதாகும்.

அந்த வகையில், இலங்கையின் பொறுப்புக்

தொடர்ச்சி: பக்கம் 21



மாவீரர்களின் தியாகத்தை வலுச்சேர்க்க சிதைந்து கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட வேண்டும்

மாவீரம் என்பது பெரும் வீரம், தன்னலமற்ற தியாகம், உயர்ந்த இலட்சியத்திற்காகத் தம்மை அர்ப் பணிக்கும் மனநிலையைக் குறிக்கும் ஒரு சொல்லாகும்.

சொற்பொருள்:

“மா” (பெரிய, மேலான) + “வீரம்” (துணிவு, தியாகம்) இணைந்து, சாதாரண வீரத்தைக் கடந்த உயர்ந்த வீரத்தைக் குறிக்கிறது.

தியாக உணர்வு:

ஒரு சமூகம், தமது இனம், தமது மண் (நிலம்) விடுதலைபெறத் தம் உயிரையும் ஈகம் செய்யத் தயாராகும் உன்னத உணர்வை இது வெளிப்படுத்துகிறது.

வரலாற்றுப் பயன்பாடு:

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் போர்க்கள வீரர்களின் பெருமையைக் குறிக்கவும், தற்காலத்தில் விடுதலைப் போராட்டங்களில் உயிர்நீத்தவர்களைக் குறிக் கும் “மாவீரர்” என்ற சொல்லுடனும் இது தொடர்புபடுத்தப் படுகிறது.



மாவீரம் என்பது பெரிய வீரம் அல்லது பெருமை தரும் வீரம் என்பதாகும். வீரம் துணிவான ஓர் உணர்வு. தாம் சந்திக்கும் ஒவ்வொரு சவாலையும் எதிர்கொண்டு, வலி, ஆபத்து, எதிர்பாராத நிகழ்வுகள், எதிர்ப்பு எனப் பலவற்றைக் கடந்து வெற்றிகாண முயல்வதே மாவீரம். சரி என்று பட்டதை யார் தடுத்தாலும் சிரம் தாழ்த்தாமல் செய்து முடிப்பதே வீரம்.

புறப்பொருள் இலக்கியங்களில் வீரம் என்ற உணர்வு முதன்மை பெறுகின்றது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை என்று அனைத்துப் புறத்திணைகளிலும் வீர மறவர்களின் துணிவும், அவர்கள் எதிரிகளை எதிர்த்துப் போராடத் தயங் காமையும் கூறப்பட்டுள்ளன.



அகப்பொருளில் பெரும்பாலும் வீரம் முன் மொழியப்படாவிடினும், பல செயல்களில் தலைவனும், தலைவியும், பாங்கியும், நற்றாயும், செவிலித்தாயும், பல்வேறு சமூக உறுப்பினர்களும் தாம் விரும்பியதை அடைய வீரத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.



வீரத்தின் தன்மை
தன் நாட்டைக் காத்தல்
நேர்மையாக இருத்தல்
தன் கடமையை எவ்விதத் தடைகள் வந்தாலும் சிரமேற்று வெற்றிபெறுதல்
நினைத்ததைச் சாதித்தல்
விடாமுயற்சி
தன்னைச் சார்ந்தோரைக் காத்தல்

இந்த ஆறு உன்னதப் பண்புகளே “மாவீரம்”. அவற் றைக் களத்தில் இனத்துக்காகப் போராடிச் செயல்படுத்திக் காட்டிய ஈழத்தில் ஒரேயொரு விடுதலை இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே. அந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய தேசியத் தலைவரின் அர்ப்பணிப்பும் ஆளுமையுமே, அவர்களின் உன்னதத் தியாகத்தால் தம்மை ஆகுதியாக்கியவர்களைப் புனிதர்களாக மாற்றியது. விடுதலைப் புலிகளின் “மாவீரர்கள்” எனப்படும் அந்த ஒப்பற்ற உயிர்த் தியாகம் செய்தவர்களை, ஒரே நாளில் தேசமாகத் திரண்டு அஞ்சலி செலுத்தி நினைவுகூரும் நாளாக 1989, கார்த்திகை 27ஆம் நாளை தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் பிரகடனப்படுத்தியிருந்தார்.

அந்தத் தினம், விடுதலைப் புலிகளின் முதலாவது வீரச்சாவைத் தழுவிய போராளி சங்கர் வீரச்சாவைத் தழுவிய நாளான 1982, கார்த்திகை 27ஆம் நாளாகும். அந்த நினைவு நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.



கடந்த வெள்ளிக்கிழமை, 2026, நவம்பர் 27ஆம் நாள், வழமைபோன்று ஈழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களை நினைவுகூர்ந்து, துயிலும் இல்லங்களிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழர்களும், தமிழ்நாட்டுத் தமிழர்களும், மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழிலுக்காகச் சென்ற தமிழ் இளைஞர்களும் ஒன்றுதிரண்டு சுடர் ஏற்றி வணக்கம் செலுத்தும் நிகழ்வு, கடந்த வருடங்களைப் போன்றே இந்த வருடமும் எழுச்சியாக இடம்பெற்றது.

இந்த 2026ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவீரர் நாள் 37ஆவது மாவீரர் நாளாகும். 1989, கார்த்திகை 27 தொடக்கம் 2008, கார்த்திகை 27 வரை ஈழத்தில் விடுதலைப் புலிகளால் 20 மாவீரர் நாட்கள் இடம்பெற்றன. இந்த 20 நாட்களிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் 20

பா.அரியநேத்திரன்

மாவீரர் நாள் உரைகளை நிகழ்த்தியுள்ளார்.

அவருடைய ஒவ்வோர் உரையும் ஒரு தீர்க்கதரிசன உரையாகவே பார்க்கப்பட்டது. அவர் இறுதியாக 2008, கார்த்திகை 27ஆம் நாள் மாவீரர் நாள் உரையில் கூறியது: “இந்த வரலாற்றுச் சூழமைவில், தமிழர் உலகின் எந்த மூலை யில் வாழ்ந்தாலும், எந்தக் கோடியில் வளர்ந்தாலும், எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன்.

அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங் கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



சத்திய இலட்சியத் தீயில் தம்மையே அழித்துச் சரித்திரமாகிவிட்ட எமது மாவீரர்கள் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோமென உறுதியெடுத்துக் கொள்வோமாக”.

எனக் கூறியிருந்தார். இதனை அவதானித்தால், சர்வதேசத்தை நோக்கி விடுதலைப் பயணத்தை முன் னெடுக்க வேண்டிய தேவையையும், புலம்பெயர்ந்து வாழும் இளையோருக்கும் அந்தப் பணி உண்டு என்பதையும் தமது உரையின் மூலம் மேலோட்டமாகச் சுட்டிக்காட்டியதை உணர முடிகிறது.



ஒரு விடுதலைக்கான போராட்டம் அந்த நாட்டில் ஆரம்பித்தாலும், விடுதலைக்கான தீர்வையும் அதன் வெற்றியையும் அந்த நோக்கத்தையும் தீர்மானிக்கும் சக்தி சர்வதேசமாகும். தலைவர் மேதகு அவர்களின் இறுதி உரையில், தேச விடுதலையைத் தீவிரமாக முன்னெடுத்து வருபவர்கள் புலம்பெயர்ந்து வாழும் இளையோர் என்பதைத் தெளிவாகக் கூறி, அவர்களிடம் போராட்டத்தை ஒப்படைத்ததாகவே அந்த உரையின் தாற்பரியம் தெரிகிறது. சர்வதேசத்தின் மூலம் எமது இலக்கை அடைவதற்கான

தொடர்ச்சி: பக்கம் 19



தீபச்செல்வன்

“எந்த நிலை வந்தாலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்... சாவரும்போதிலும் தணலிடை வேகிலும் சந்ததி தூங்காது...” என்ற உறுதியைத் தீபங்களால் ஒளிர்ந்த தமிழர் தேசம் மீண்டும் உலகிற்குச் சொல்லியிருக்கிறது. எங்கள் விடுதலைக்காகப் போராடிய மாவீரர்களைப் பயங்கரவாதிகள் என்று அழைத்தவர்களுக்கும், சிறிலங்கா அரசின் தமிழர் விரோதச் செயல்களுக்கும் நவம்பர் 27ஆம் நாள் ஈழ மக்கள் தமது திரட்சியின் வழியாகப் பதிலளித்திருக்கிறார்கள். எமது மண்ணின் மைந்தர் களையும், எமது விடுதலைக்காகப் போராடிய மானமிகு மாவீரர்களையும் நினைவுகூர எந்தத் தடைகள் வந்தாலும் துயிலும் இல்லங்களில் திரள்வோம் என்பதை ஈழத் தமிழ் மக்கள் செயலில் உணர்த்தியுள்ளனர்.



ஈழத் தேசத்தின் புனித நாள்

மாவீரர் நாள் என்பது ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தம்மை ஆகுதியாக்கிய ஈழ மண்ணின் வீரர்களை அஞ்சலிக்கும் புனித நாள். விடுதலைத்தாகத்துடன் தமிழர் தேசம் எங்கும் விதைக்கப்பட்ட கல்லறைகள் கண் திறந்து பார்க்கும் உணர்வு மேலிடும் நாள். உணர்வுமயமாக மட்டுமே இந்த நாள் தனது முக்கியத்துவத்தைப் பெற்று முடிந்துவிடுவதில்லை. பண்பாட்டு ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் இந்த நாள் முதன்மை பெறுகின்றது. இருப்புக்காகப் போராடிய விடுதலைப் போராளிகளின் நினைவிடங்களும் சிதைக்கப்பட்டமை, ஈழ மண்ணில் நாம் சந்திக்கும் இருப்புசார் இடர்களையும் ஒடுக்குமுறையின் கொடூரத்தையும் இந்த உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கின்றன.



இறந்தவர்களை நினைவுகூர்ந்து வழிபடுதல் என்பது மானுட மாண்பு. தமிழ்ச் சமூகத்தில் தெய்வ வழி பாடுகளும், போரில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபடும் மரபும் தொன்றுதொட்டு நிலவி வருகின்றன. அந்த வகையில் மாவீரர் நாளும் மாவீரர் துயிலும் இல்லங்களும் தமிழரின் பண்பாட்டுரிமை மையங்களாகத் திகழ்கின்றன. உலகெங்கும் உள்ள பண்பாட்டுச் சின்னங்களைப் பேணுவதும் அவற்றை மக்கள் கொண்டாடுவதும் பன்னாட்டு மரபுகளுக்கும் விதிகளுக்கும் இயைந்தது. அப்படியிருக்க, ஈழத் தேசத்தில் 2009 முள்ளிவாய்க்கால் போரின் முடிவில் மாவீரர் துயிலும் இல்லங்களைச் சிறிலங்கா அரசு தனது படைகளைக் கொண்டு சிதைத்தது. ஈழத் தமிழினத்தின் மீது அறமற்ற வகையில் இனவழிப்புப் போரை நடத்தி இனப்படுகொலையைப் புரிந்ததைப் போலவே, மாண்ட வீரர்களின் கல்லறைகளுடனும் போர் செய்து அவற்றை அழித்தது.

அடக்குமுறைக்குள் மாவீரர் நாள்

அதற்குப் பின்னரும் துயிலும் இல்லங்களில் இராணுவ முகாம்களை அமைத்து அவற்றில் படையினர் குடிய மர்த்தப்பட்ட மற்றொரு ஆக்கிரமிப்பும் அரங்கேறியது. 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் பல துயிலும் இல்லங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறிய போதும், இன்னமும் கோப்பாய் துயிலும் இல்லம், கொடிகாமம் துயிலும் இல்லம், முள்ளியவளை துயிலும் இல்லம், மல்லாவி ஆலங்குளம் துயிலும் இல்லம் என்பன இராணுவத்தின் பெரிய முகாம்களாக உள்ளன. “என் உறவு விதைக்கப்பட்ட துயிலும் இல்லத்திற்கு நான் செல்ல முடியாமல் போனேன். என் பிள்ளை அனாதையாகக் கிடக்கிறான்...” என்ற வார்த்தைகளைக் கேட்டபோது மனம் துடித்தது.



மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர் தாயகத்தில் நினைவேந்தல் ஏற்பாடுகளை மேற்கொண்ட மக்கள் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகங்கொடுத்தனர். கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் மாவீரர் நாளுக்காக அமைக்கப்பட்ட பதாகைகளும் நினைவு வளைவுகளும் பொலிஸாரால் அகற்றப்பட்டன. நள்ளிரவு வேளைகளில் நினைவேந்தல் ஏற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் மீது பொலிஸார் தலையிட்டதுடன், சிலர் கைது செய் யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டபோதும், நினைவேந்தல் ஏற்பாடுகளைச் செய்வதற்கான மக்களின் உரிமை மீதான அச்சுறுத்தல் தொடர்ந்தது. மாவீரர் வாரத்தின் தொடக்கத்திலிருந்தே வடக்கு, கிழக்கின் பல பகுதிகளிலும் பொலிஸாரின் கண்காணிப்பும் விசாரணைகளும் நெருக்கடிகளும் அதிகரித்திருந்தன.

இராணுவ முகாம்களாகத் துயிலும் இல்லங்கள்

அதேவேளை, இராணுவத்தின் வசமுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிப்பதாக அரச தரப்பில் தெரிவிக் கப்பட்டிருந்தபோதும், அவை விடுவிக்கப்பட வில்லை. மணலாறு உள்ளிட்ட பகுதிகளில் நினைவேந்தல் ஏற்பாடுகளுக்குச் சென்ற மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பல்வேறு வழிகளில் கட்டுப்படுத்தப்பட்டதுடன், சில இடங்களில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளும் ஏற்பட்டன. இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியிலும் மக்கள் துயிலும் இல்லங்களை நோக்கிப் பெருந்திரளாகச் சென்றமை, நினைவேந்தல் என்பது அரசின் அனுமதியால் வழங்கப்படும் ஒன்றல்ல, அது ஒரு மக்களின் வரலாற்றோடும் இழப்புகளோடும் பிணைந்த அடிப்படை உரிமை என்பதை மீண்டும் வெளிப்படுத்தியது.

மாவீரர் நாளை முன்னிட்டு தமிழர் தேசம் எங்கும் பேரெழுச்சி கொண்டது. எங்கும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் பறந்தன. இயக்கப் பாடல்கள் ஒலித்தன. நகரங்களின் பிரதான வீதிகளில் மாவீரர் நினைவு வளைவுகளையும் பதாகைகளையும் மக்கள் அமைத்தனர். பேருந்துகளிலும் வர்த்தக நிலையங்களிலும் தமிழர் நகரங்களிலும் ஆலயங்களிலும் இயக்கப் பாடல்கள் வழியாக மாவீரர்கள் நினைவுகூரப்பட்டமை இம்முறை தாயகத்தின் பேரெழுச் சியை வெளிப்படுத்தியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் துயிலும் இல்லங்களுக்குத் திரண்டனர். கடந்த ஆண்டைவிட மக்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்ததுடன், ஒழுங்கமைப்புகளும் சிறப்பாக இருந்தன.



விழி நீரால் தேசத்தை வரைந்தனர்!

வடக்கு, கிழக்கில் உள்ள துயிலும் இல்லங்கள் எங்கும் திரண்ட மக்கள், கண்ணீராலும் உணர்வுப் பெருக்காலும் அஞ்சலி செலுத்தித் தமது தாகத்தையும் தலைமுறைக் கனவுகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். நிகரற்ற தியாகங்களாலும் அதி யுயர்ந்த வீரங்களாலும் அடையாளம் பெற்ற ஈழ விடுதலைப் போராட்டம், எங்கள் தேசத்தில் விதையாக இருந்து விடுதலைக்கும் சுதந்திரமான அமைதிக்கும் காலத்தை வழிப்படுத்தும் என்ற பெருநம்பிக்கையை இந்த மாவீரர் நாள் மீண்டும் ஏற்படுத்தியிருக்கிறது.



2009ஆம் ஆண்டுக்கு முந்தைய தமிழீழத் தேசத்தை இந்த மாவீரர் நாள் மீண்டும் நினைவுபடுத்தியது. அன்றைய காலத்தில் மக்களுடன் போராளிகளும் சீருடைகளில் வந்து நின்று தீபங்களை ஏற்றிக் கண்ணீர் சிந்துவார்கள்; மக்களுக்கு ஆறுதல் அளிப்பார்கள். தளபதிகளும் போராளிகளும் மாவீரர் துயிலும் இல்லங்களில் எழுச்சி யுடன் காணப்படுவார்கள். தமிழ்த் தேசியத்தைத் தோற் கடித்துவிடலாம், இல்லாமல் செய்துவிடலாம் என்று நினைப் பவர்களுக்கு இம்முறையும் மாவீரர் நாள் வழியாக மக்கள் தக்க பதிலை வழங்கியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் இல்லாத இந்தப் பதினாறு ஆண்டுகளில், மக்களின் நினைவேந்தலுக்காக எவருடைய தலையீடும் இன்றி, எவருடைய அழைப்புமின்றி ஒட்டு மொத்தத் தமிழ் மக்களும் துயிலும் இல்லங்களில் திரண்டிருக்கிறார்கள். இந்தத் திரட்சி கனமான ஒரு செய்தியை உலகிற்குத் தெளிவாக வழங்கியிருக்கிறது. விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை என்பதைப்போல, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்

தொடர்ச்சி: பக்கம் 21



கோபிகை

மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் போராடி உயிர் நீத்தவர்களின் நினைவுகளைத் தாங்கி நிற்பவை நடுகற்கள். இவை வீரக்கற்கள் எனவும் கூறப்படும்.



தன்னிகரில்லாத வரலாற்றை எழுதிவிட்டு அமை தியாக உறங்கும் எம் மானமிகு வீரர்கள் சாதாரண மனிதர்கள் அல்லர்; அவர்கள் புனிதர்கள்.

ஆசைகளுக்குக் கடிவாளமிட்டு, தேச விடுதலை ஒன்றையே தமது இலக்காக வரித்துக்கொண்டு, இலட்சிய வேள்வியில் விதையாகிப் போனவர்கள்.



உன்னத வாழ்வின் சான்றான மறவர்களை மறந்து வாழ்வதென்பது, தமிழனாகவும் மனிதனாகவும் நாம் செய் யும் வரலாற்றுத் தவறாகும்.

காலத்தீயில் அவர்கள் கரைந்து போகவில்லை; ஞாலப் பேரொளியில் சுடரென மிளிர்கிறார்கள். எமக்கு முகவரி எழுதிவிட்டு, மண்ணின் மீது உறங்குகிறார்கள்.



சுதந்திர வேட்கையில் தங்களை ஆகுதியாக்கி, மண்ணிலே விதையானவர்கள்; விண்ணிலே விடிவெள்ளி யானவர்கள்.

எமது மாவீரர்களின் மகோன்னதங்களைச் சொல் வதற்கு வார்த்தைகள் போதாது. என் மனதைத் தொட்ட ஒரு சம்பவத்தோடு இதனைத் தொடர்கிறேன். அண்மையில் கிளிநொச்சி – உருத்திரபுரம் பகுதிக்குச் சென்றிருந்தேன். நான் செல்ல வேண்டிய வீட்டுக்குப் போவதற்காகப் பேருந் திலிருந்து இறங்கியபோது, ஒரு வயதான முதியவர், தரையில் அமர்ந்திருந்து கச்சான், கடலை, சோளப்பொரி, மைலேடி ரொபி, எள்ளுருண்டை, கச்சான் அல்வா போன்றவற்றை வைத்து விற்பனை செய்துகொண்டிருந்தார். போகும்போது நான் விறுவிறுவென நடந்து சென்றுவிட்டேன். பசி வேறு, அங்கும் இங்கும் பார்க்கவிடவில்லை.

மாலை மூன்று மணி இருக்கும். நான் திரும்பப் பேருந்துக்காக வந்தபோது, அந்த முதியவர் பேருந்து தரிப்பிடத்திற்குள் அமர்ந்திருந்து சாப்பிட்டுக்கொண்டிருந் தார்.



எழுபது வயதை நெருங்கிவிட்ட தோற்றம். நீலநிறச் சரம், நீலக் கோடுகள் போட்ட அரைக்கைச் சட்டை அணிந்திருந்தார். “ஏன் அப்பா, இப்போதுதான் சாப்பி டுகிறீர்களோ?” என்று கேட்டேன்.

“ஓம் பிள்ளை, மழை வந்திட்டுது. பின்னர், எல் லாத்தையும் எடுத்து உள்ளுக்குள்ள வைச்சிட்டுத்தான் சாப் பிட இருந்தனான்” என்றார். “நிறைய நாட்களாக இங்கே இருந்து கச்சான் விற்கிறீர்களா? நான் முதலில் வரும்போது காணவில்லையே?” என்று கேட்டேன்.

“மாணிக்கப்பிள்ளையார் கோயில் திருவிழாவோட வந்தனான் பிள்ளை. பிறகு, கோயில்காரர் இதிலேயே இருந்து கச்சான் விற்கச் சொன்னவை” என்றார். “ஓ... சரி, சரி. சாப்பாடு வீட்டிலிருந்து அனுப்பிவிட்டார்களா?” என்று கேட்டேன்.

“இல்லை பிள்ளை, காலையிலேயே நான் வரும்போதே கொண்டுவந்திட்டன்” என்றார். “அப்பாவுக்கு எத்தனை பிள்ளைகள்?” “நாலு பேரில ரெண்டு பேர் துயிலுமில்லத்தில இருக்கினம்; ரெண்டு பேர் இஞ்ச இருக்கினம்” என்றார்.

அவருடைய பதிலைக் கேட்டு வியப்பும் வேதனை யும் கலந்த உணர்வுடன் நிமிர்ந்து பார்த்தேன். “என்னப்பா சொல்லுறீங்கள்? இரண்டு மாவீரர்களா உங்கட வீட்டில?” “ஓம் பிள்ளை. மகனும் இயக்கத்தில்தான் இருந்தவர். பிறகு வந்திட்டார்; இப்ப கட்டாறில நிக்கிறார்.”

“ஓ... ஏன் அப்பா, நீங்கள் ஒவ்வொரு நாளும் கச்சான் விற்கத்தான் போகிறீர்களா? மாவீரர் குடும்பங்களுக்கு நிறையப் பேர் உதவி எல்லாம் செய்கிறார்கள். உங்களுக்கு ஒருவரும் உதவி செய்யவில்லையா?”

“வந்து கேட்டவை பிள்ளை. நான் தான் வேண்டாம் என்று சொல்லிப்போட்டன். என்ர பிள்ளைகள் தாங்கள் இந்த மண்ணுக்காக விருப்பப்பட்டுப் போராடப் போனவையள்; வீரச்சாவடைஞ்சிட்டினம். எங்கட மண்ணில விதையாக உறங்கிக்கொண்டிருக்கினம். எங்களுக்கு அது நிறைவுதான். நாலு பெத்தன்; ரெண்டு பிள்ளையளை இனத்துக்காகக் கொடுத்தன்; ரெண்டு பேர் வீட்டுக்கு இருக்கினம்...

“நானும் மனுசியும் கச்சான் விக்கப் போவம். எங்கள் ரெண்டு பேருக்கும் இந்த வருமானம் போதும். அதில நாங்கள் நிறைவாக வாழுறம் பிள்ளை. என்ன... எங்கட பிள்ளைகளின்ர கனவு நிறைவேறாமல் போச்சுது; அதுதான் கவலை...” என்றார்.

நானும் பெருமூச்சு ஒன்றை வெளிவிட்டு, “அது உண்மைதான் அப்பா. பார்ப்போம், காலம் என்ன செய்கிறது என்று...” என்றேன். அவரும் சாப்பிட்டு முடித்து, கைகளைக் கழுவிவிட்டு வந்து அமர்ந்தார்.



“உங்கள் பிள்ளைகள் எப்போது வீரச்சாவடைந்த னர்?” என்று கேட்டதும், அவருடைய முகத்தில் வந்து போன ஒளிக்கீற்றை நான் அவதானிக்கத் தவறவில்லை. “மூத்தது மகன்தான் பிள்ளை. அவர் ஆனையிறவுச் சண்டையில வீரச்சாவு. ஆள் நல்ல கெட்டிக்காரன்; பார்க்கவும் அழகாதான் இருப்பார்” என்றுவிட்டு, மகனின் பெயரையும் கூறினார்.

நான் தலையை ஆட்டி, “மகள்?” என்றேன். “மகள் முகமாலைக்குப் போகேக்க கிபிர் அடிச்சு வீரச்சாவடைசிட்டா” என்றவர், “அவவும் அங்க நல்ல கெட்டித்தனமா இருந்தவா தான். தனியத்தான் ஜீப் ஓட்டிக்கொண்டு போனவா. அந்த நேரம்தான் கிபிர் அடிச்சது” என்றார்.

தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் போராட்ட வாழ்வில் சிறந்த வீரர்களாகச் செயற்பட்டனர் என்பதில் அவருக்கு இருந்த அலாதியான மகிழ்ச்சி சிந்திக்க வைத்தது. இவரைப் போன்ற பெற்றோர் எத்தனை பேர் எம் மண்ணில் உள்ளனர்!

“அப்பா, உங்களை ஒரு படம் எடுக்கவா?” என்று கேட்டேன். “அதெல்லாம் வேண்டாம் பிள்ளை” என்றார். ஆனால், இவரைப் போன்ற ஒப்பற்ற மனிதரைக் கண்டுவிட்டு, அவர்களை நினைவுப் பெட்டகத்தில் பதிக்காமல் வந்தால் அது சரியா? அதனால், “முகம் தெரியாமல் எடுக்கிறேன் அப்பா...” என்று கூறிக்கொண்டே படம் எடுத்துவிட்டேன்.

எந்த விளம்பரமும் தேடாமல் மகத்தான மனதோடு வாழும் இவரைப் போன்ற ஒப்பற்ற உறவுகள்தான் எமது தேசிய ஆன்மாவைச் சுமந்து செல்பவர்கள். எமது வீரமறவர் களை நினைவுகூருவது காலங்காலமாக எமக்கான கடமை யாகும். நடுகற்களாக, வீரக்கற்களாக மாறிவிட்ட அவர்களை அஞ்சலிப்பது எமது தார்மீக உணர்வோடு கலந்த விடயம். அது தலைமுறைகள் கடந்தும் தொடரும் என்பதில் ஐயமில்லை.

• • •



நினைவுகளின் நெருப்பும், மௌனத்தின் மொழியும்

மிரேகா நாகேஸ்வரன்

“நினைவுகளை அழிக்க முடியாத ஒரு தேசத்தின் மனச் சாட்சியில், சில நாட்கள் வெறும் நாட்காட்டித் தேதிகளாக இருப்பதில்லை. அவை வரலாற்றின் காயங்களாகவும், தலைமுறைகள் கடந்து ஒலிக்கும் மௌனங்களாகவும் வாழ்கின்றன.”



தமிழர் வரலாற்றின் பல தசாப்தங்களைப் புரட்டிப் பார்க்கும்போது, சுதந்திரத்திற்கான ஏக்கம், தாயகத்தின் மீதான பற்றுதல், அரசியல் உரிமைகள், அடையாளம், பாதுகாப்பு, சமத்துவம் மற்றும் கண்ணியமான வாழ்வு ஆகியவை பல்வேறு அரசியல் உரையாடல்களின் மையத்தில் இருந்திருக்கின்றன. தமிழீழத் தாயகம் என்ற இலட்சியத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஒரு தலைமுறை போராட்டத்தின் வழியே தமது அரசியல் கனவுகளை வெளிப்படுத்தியது. அந்த இலட்சியத்தின் பெயரில் பல உயிர்கள் இழக்கப்பட்டன பலர் உடல் உறுப்புகளை இழந்து இன்றும் அதன் விளைவுகளுடன் வாழ்கின்றனர்; பல குடும்பங்கள் தமது வாழ்வின் மிக முக்கியமான உறவுகளை இழந்திருக்கின்றன.

கார்த்திகை மாதம் நெருங்கும்போது, தமிழ் மக்களின் நினைவுகளில் ஒரு நாள் தனித்துவமான கனத்துடன் வந்து நிற்கிறது. நவம்பர் 27, மாவீரர் நாள். இது ஒரு தேதியை நினைவுகூரும் நிகழ்வு மட்டுமல்ல பல ஆண்டுகளாகப் போர், இழப்பு, பிரிவு, துயரம் மற்றும் நம்பிக்கைகளின் இடையே வாழ்ந்த ஒரு சமூகத்தின் கூட்டு நினைவுகளுடன் பின்னிப் பிணைந்த நாளாகும்.



தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில், நவம்பர் 27 மாவீரர் நாளாக நினைவுகூரப்படுவதற்கான வரலாற்றுப் பின்னணி 1982ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி உயிரிழந்த சங்கர் என அழைக்கப்பட்ட சத்தியநாதனின் நினைவுடன் தொடர்புடையது. 1989ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி முதலாவது மாவீரர் நாள் அனுட்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்த நாள் போரில் உயிரிழந்த போராளிகளை நினைவுகூரும் நாளாகப் பரவலாக அறியப்பட்டது. ஆனால், நினைவுகூரல் என்பது வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட நிகழ்வை மட்டும் மீட்டெடுப்பதல்ல.

ஒரு மனிதனின் வாழ்க்கை, அவன் கொண்டிருந்த கனவுகள், அவனை நேசித்த குடும்பம், அவன் இல்லாததால் வெறுமையாகிப் போன ஒரு வீடு, சொல்லப்படாமல் போன வார்த்தைகள், காத்திருப்பில் கரைந்த உறவுகள் என எண்ணற்ற மனிதக் கதைகளின் தொகுப்பாகவும் நினைவுகள் அமைகின்றன.

“ஒரு தாயின் மனதில் இன்னும் உயிரோடு இருக்கும் மகனின் நினைவு. ஒரு தந்தையின் மௌனத்தில் புதைந்திருக்கும் சொல்லப்படாத துயரம். ஒரு சகோதரியின் நினைவுகளில் மீண்டும் மீண்டும் தோன்றும் குழந்தைப் பருவம். ஒரு காதலியின் இதயத்தில் முடிவுறாத காத்திருப்பு. ஒரு பிள்ளையின் நினைவில் புகைப்படமாக மட்டுமே வாழும் தந்தை அல்லது தாய்.” இப்படியாக எண்ணில் அடங்காதவை அவை.

போரின் வரலாறு பெரும்பாலும் அரசியல், இராணுவம், ஒப்பந்தங்கள், அதிகாரம் மற்றும் நிகழ்வுகளின் வழியே எழுதப்படுகிறது. ஆனால் அந்த வரலாற்றின் மறுபக்கத்தில், மனிதர்களின் வாழ்க்கைகள் இருக்கின்றன. போர் முடிந்தாலும் முடிவடையாத வலிகள் இருக்கின்றன. காலம் கடந்தாலும் குணமடையாத காயங்கள் இருக்கின்றன.

ஒருவரை இழந்த குடும்பத்தின் வாழ்க்கையில், அந்த இழப்பு ஒரு நாளில் முடிவதில்லை. அது ஒவ்வொரு பிறந்த நாளிலும், ஒவ்வொரு திருநாளிலும், ஒவ்வொரு குடும்பச் சந்திப்பிலும், ஒவ்வொரு வெறுமையான இருக்கையிலும் மீண்டும் நினைவூட்டப்படுகிறது.



மாவீரர் நாள் நினைவுகூரல்கள் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் பல்வேறு வடிவங்களில் இடம்பெற்று வருகின்றன. மலர் தூவுதல், நினைவுச் சுடர் ஏற்றுதல், மௌன அஞ்சலி செலுத்துதல் மற்றும் நினைவுரைகள் நிகழ்த்துதல் போன்ற வழிகளில் மக்கள் தங்கள்

நினைவுகளை வெளிப்படுத்துகின்றனர். இந்த நினைவுகூரல்களின் பின்னால் அரசியல் கருத்துக்களைக் கடந்தும், மனிதர்களின் தனிப்பட்ட இழப்புகளும், குடும்பங்களின் துயரங்களும், நினைவுகளைத் தக்க வைத்துக்கொள்ளும் விருப்பமும் இருக்கின்றன.

நினைவுகூருதல் என்பது கடந்த காலத்தை மீண்டும் மீண்டும் துயரத்துடன் வாழ்வதற்காக மட்டுமல்ல. வரலாற்றை மறக்காமல் இருப்பதற்கும், மனித உயிரின் மதிப்பை உணர்வதற்கும், ஒரு சமூகத்தின் அனுபவங்களை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதற்கும் அது அவசியமானதாகிறது. அதேவேளை, நினைவுகளின் வழியே எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அநீதிகள் மீண்டும் நிகழாத சமூகத்தை உருவாக்குவதற்கான விழிப்புணர்வும், மனித உரிமைகள், கண்ணியம், நீதி மற்றும் அமைதி ஆகியவற்றின் மீதான உறுதிப்பாடும் நினைவுகூரலின் மனிதநேயப் பொருளை ஆழப்படுத்துகின்றன.

கார்த்திகை 27 அன்று ஏற்றப்படும் ஒவ்வொரு சுடரும், நினைவுகளை உயிர்ப்பிக்கும் ஒரு குறியீடாக இருக்கலாம். அந்தச் சுடரின் வெளிச்சத்தில், நாம் இழந்த மனிதர்களின் வாழ்க்கையை மட்டுமல்ல, அவர்களை இழந்த மனிதர்களின் வாழ்வையும் பார்க்க வேண்டும். உயிரிழந்தவர்களை நினைவுகூரும் அதேவேளை, உயிரோடு இருக்கும் துயரங்களைத் தாங்கிக்கொண்டு வாழ்பவர்களையும் நாம் மறந்துவிடக் கூடாது.



நினைவுகள் அழிக்கப்படுவதில்லை. அவை சில நேரங்களில் கண்ணீராக வெளிப்படுகின்றன சில நேரங்களில் மௌனமாகின்றன சில நேரங்களில் ஒரு மலராக மலர்கின்றன் சில நேரங்களில் ஒரு மெழுகுவர்த்தியின் ஒளியில் உயிர்பெறுகின்றன. வரலாற்றின் காயங்களை மறைக்காமல், அவற்றை மனிதநேயத்துடன் அணுகி, நினைவுகளை நீதிக்கும் அமைதிக்கும் வழிகாட்டும் குரல் களாக மாற்றுவதே நம் காலத்தின் முக்கியமான பொறுப் பாகும்.

நினைவுகள் அழிக்கப்படுவதில்லை. அவற்றை மௌனப்படுத்த முயற்சித்தாலும், அவை கதைகளாக, பாடல்களாக, கவிதைகளாக, புகைப்படங்களாக, குடும்பங்க ளின் உரையாடல்களாக, தலைமுறைகளின் கேள்விகளாக மீண்டும் மீண்டும் வெளிப்படுகின்றன. வரலாறு என்பது கடந்த காலத்தின் ஒரு பதிவாக மட்டுமல்லல் நிகழ்காலத்தின் மனச்சாட்சியாகவும் எதிர்காலத்தின் பொறுப்பாகவும் அமைகிறது.



ஒரு புகைப்படத்தின் புன்னகைக்குள், எத்தனை சொல்லாத கதைகள் உறங்குகின்றன... ஒரு மலரின் இதழ்களுக்குள், எத்தனை நினைவுகள் மௌனமாகப் புதை கின்றன... முடியாத மனிதர்களின் வரலாறு... நினைவுகள் எரியட்டும்... ஆனால் மனிதம் அணையாமல் இருக்கட்டும்... நினைவுகள் நிலைக்கட்டும்... ஆனால் நாளைய உலகம் இழப்புகளற்ற வாழ்வை நோக்கி நகரட்டும்...

ஒரு போராட்டத்தின் பின்னால் இருந்த இலட்சியங் களைப் புரிந்துகொள்வது என்பது, அந்தப் போராட்டத்தின் அனைத்து வழிமுறைகளையும் ஏற்றுக்கொள்வதாக அர்த்தமல்ல. அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மனிதர் களின் நம்பிக்கைகள், அவர்கள் எதிர்கொண்ட சூழல்கள், அவர்கள் அனுபவித்த இழப்புகள் மற்றும் அவர்களின் வாழ்க்கையில் போரின் தாக்கம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளாமல் ஒரு வரலாற்றை முழுமையாக அணுகவும் முடியாது.

தொடர்ச்சி: பக்கம் 18

மாவீரர்கள்: மனிதகுல வரலாற்றின் முதுகெலும்பு



மனித நாகரிகத்தின் ஆரம்பம் தொட்டு இன்று வரையான அதன் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சியில் நாகரிகங்களை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றதோடு வரலாற்றுத் தடங்களைப் பதித்தவர்கள் போர் வீரர்களே.

பலத்தின் மூலம்தான் மனித சமூகம் ஒவ்வொன்றும் தன்னை வரலாற்றில் முன்னிலைப்படுத்தி உள்ளது. இந்நீண்ட வரலாற்றுக் கால ஓட்டத்தில் போர் வீரர்களைத்தான் அன்றிலிருந்து இன்றுவரை மனிதகுலம் நினைவுகூருகிறது, போற்றுகின்றது.



இவ்வாறு மனித வரலாற்றை சமைத்து எமக்குத் தந்துவிட்டு மடிந்துபோன மானவீரர்களை உலகெங்கும் பரந்து வாழும் மனித சமூகம் கொண்டாடிக் கொண்டிருந்தாலும், இன்றைய உலகில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலைக்காக போராடி வீழ்ந்த வீரர்களை கௌரவிப்பதில் தமிழீழ மக்கள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர்.

அந்த வகையில் இந்த நவம்பர் மாதம் 11 ஆம் திகதி பிரித்தானியா, அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் தங்களின் நாட்டுக்காக வீழ்ந்த வீரர்களை நினைவுகூர்ந்தது தெரிந்ததே.

முதலாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த நேரத்தில் ஜேர்மனி கைப்பற்றிய பிரதேசங்களை எல்லாம் நேச நாடுகள் மீளக் கைப்பற்றிய வேளையில், ஜேர்மனியின் படைகள் திக்குத் திசைமாறி நின்ற வேளையில் ஜேர்மனியின் மூன்று பிரதிநிதிகள் நேசநாடுகளின் தளபதியுடன் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை 1918 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு பகல் 11 மணி 11 நிமிடம் அமுலுக்கு வந்தது.

முதலாம் உலகப் போர் முடிவடைந்த நவம்பர் மாதம் 11 திகதியை உலகப் போரிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட சண்டைகளில் மாண்ட படைவீரர்களை பிரித்தானியா, அவுஸ்திரேலியா மற்றும் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகள் இன்றுவரை நினைவுகூருகின்றனர்.

தமிழீழ மக்கள் எவ்வாறு நவம்பர் 27 ஆம் நாளை மாவீரர் நாளாகக் கொண்டாடுகின்றனரோ அதேபோல் பிரித்தானிய மக்களுக்கும் நவம்பர் 11ஆம் நாள் முக்கியத்துவம் பெறுகின்றது.

பொப்பி எனப்படும் சிவப்பு நிற மலர் இந்நாளின் நினைவு மலராகக் கொள்ளப்படுகின்றது. பெல்ஜியம் நாட்டில் உள்ள பிலண்டஸ் ஃபீல்ட் (Flanders Fields) நகரத்திலும் பிரான்சிலும் இவ்வகைப் பொப்பிப் பூக்கள் அதிகம் காணப்படுகின்றன. அத்துடன் பிரித்தானியாவைச் சேர்ந்த போர்வீரன் லெப்டினன்ட் கேணல் ஜோன் மக்ரே என்பவர் 1915 எழுதிய பெல்ஜியத்தில் பிலண்டஸ் ஃபீல்ட் (Flanders Fields) போர்க்களத்தில் "பொப்பிப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன"என்றும் "சிலுவை அடையாளங்களுக்கு இடையில் வரிசை வரிசையாகப் பூத்துக் குலுங்கும் பொப்பிப் பூக்கள் எங்களுடைய இருப்பை அடையாளங் காட்டுகின்றன."என்ற கவிதை வரிகளின் காரணமாகவே பொப்பிப் பூக்களை இந்நாடுகள் தங்களின் கல்லறை மலர்களாகத் தேர்ந்தெடுத்திருந்தன.



இன்று ஈழத் தமிழர்களின் வரலாற்று, பண்பாட்டு விழுமியத்துடன் கலந்துவிட்ட கார்த்திகைப்பூ என நாம் அழைக்கும் காந்தள் மலரினது இதழ்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பெண்களின் கைவிரல்களுக்கு ஒப்பிட்டுக் கூறப்படுவதால் இதனைக் "காந்தள் மலர்" என்பர். இக் கார்த்திகைப்பூ பண்டைத் தமிழ் வாழ்வுக்கு மிகவும் நெருக்கமான பூக்களில் ஒன்றாக இருந்துவந்துள்ளது.

"காந்தளங் கண்ணிச் செழுங்குடிச் செல்வர்"
என்று காந்தள் மலர் மாலை அணியும் வழக்கத்தை பதிற்றுப்பற்று சான்றளிக்கின்றது.
"மரகத மணித்தாள் செறிந்த மணிக்காந்தள் மென் விரல்கள்"
என்று சிலப்பதிகாரம் உவமை செய்கின்றது.
"காந்தள் முழுமுதல் மெல்லிலை குழைய முயங்கலும் இல்லுய்த்து நடுதலும்"

என்று தலைவனுடைய மலையில் இருந்து மழைநீரால் அடித்து வரப்பட்ட காந்தட் கிழங்கை நட்டு வளர்த்துத் தன்னை ஆற்றுப்படுத்தும் நாயகி பற்றி குறுந்தொகை கூறுகிறது.

"வெய்யறி சிறப்பன் வெஞவாய் வேலன் வெறி யாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை"

என்று காந்தள் மலரணிந்து வெறியாடுவதைத் தொல் காப்பியம் சித்தரிக்கின்றது.

அத்துடன் தமிழரின் போர்க்கடவுளான முருகனுக் குரிய பூவாக புறப்பொருள் வெண்பாமாலை சிறப்பித்துக் கூறு கின்றது.

இப்படிக் கார்த்திகைப் பூவில் வாய் நனைக்காத புலவர்களே இல்லை என்று கூறும் அளவிற்கு பழந்தமிழர் இலக்கியங்கள் எங்கும் கார்த்திகைப்பூ நிறைந்து கிடக்கின்றது.

அத்துடன் ஒரு சிறப்பான விடயம் என்னவெனில் ஈழத்தின் விடிவுக்காக தம்முயிர்களைத் துறந்த வீரர்களின் நினைவுதினமான கார்த்திகை 27 ஆம் திகதி அன்றே அவுஸ்திரேலியாவில் வாழும் பழங்குடி மக்களான ஒஸ்திர

அ.மயூரன். எம்.ஏ

லோயிட் மக்கள் தமது மடிந்தவர்களை நினைவு கூர்ந்து நினைவுதின விழா ஒன்றை இத்தினத்திலேயே சிறப்பாகச் செய்கின்றனர் என்பது வியப்பான விடயம் மட்டுமல்ல. சிந்திக்கவும் தூண்டும் விடயமும் கூட. இது குறித்த மேலதிக விடயங்கள் ஆராயப்படவேண்டியவையே.

அதேபோல் தாமாகச் சுதந்திரப் பிரகடனத்தைச் செய்து தமக்கென ஒரு நாட்டை உருவாக்கி அதற்கு சர்வதேச அங்கிகாரத்தையும் பெற்று இன்று சர்வ வல்லமையும் உடைய நாடாகத் தன்னை முன்னிலைப் படுத்தியுள்ள இஸ்ரேலும் தான் பிரகடனப்படுத்திய சுதந்திர தினத்தை (1948) ஆண்டு தோறும் தேசிய வீரர்கள் தினமாகக் கொண்டாடி வருவதனைக் காணலாம்.

இன்று உலகம் முழுவதும் யூதர்கள் பலமாகவும் சக்தி வாய்ந்த இனமாகவும் இருப்பதற்கு அந்த இனத்தின் காவலர்களாக விளங்கியதோடு மட்டுமல்லாமல் பல உயிரிழப்புக்கள் தியாகங்கள் என்பனவற்றின் பின் இஸ்ரேல் என்ற நாட்டை சமைத்துக் கொடுத்த "ககானா" என்கின்ற விடுதலை அமைப்பினர். முக்கியமாக இந்நாளில் நினைவு கூரப்படுகின்றனர்.



450 ஆண்டுகளாக இந்தோனேசிய அரசாங்கத்தின் கொத்தடிமைத்தனத்தின் கீழ் இருந்த கிழக்குத் தீமோர் ஆனது கிழக்குத் தீமோரின் தந்தை எனப்படும் சனானா குஸ்மாவே அவர்களின் தலைமையில் சிறிது சிறிதாக வளர்ந்து சுதந்திரப் போராட்டமாக மாறி 20.05.2002 சுதந்திரம் அடைந்தது. அந்த நாள் இன்றும் சுதந்திர தினமாக இல்லாது விடுதலைக்கு வித்தாகிப் போனவர்கள் நாளாக எழுச்சியுடனும் உணர்வு பூர்வமாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றமையைக் காணலாம்.

ஒரு தேசத்தின் பிறப்பு அந்நாட்டு மக்களின் கையில் தான் இருக்கின்றது என்பதனை கிழக்குத் தீமோர் மக்கள் தம் விடுதலைப் போராட்ட வெற்றியின் மூலம் நிரூபித்துள்ளனர். இவர்களின் வெற்றி விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் எப்படியும் வெற்றி பெற்றுச் சுதந்திரம் பெறுவர் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும்.

தொடர்ச்சி: பக்கம் 20



குத்தகை ஒப்பந்தம் 2042: வரலாற்றுத் தவறு திருத்தப்படுமா, தொடருமா?

இலங்கையின் பொருளாதார முதுகெலும்பாகத் திகழும் பெருந்தோட்டத் துறையில், தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணிக் குத்தகை ஒப்பந்தம் 2042ஆம் ஆண்டுடன் நிறைவடையவுள்ளது. இன்னும் 16 ஆண்டுகள் எஞ்சியிருக்கும் நிலையிலேயே, இந்த ஒப்பந்தத்தை மீண்டும் நீட்டிப்பது தொடர்பில் அரசாங்கம் ஆராயத் தொடங்கியுள்ளமையும், அதற்காக விசேட குழுவொன்றை நியமித்துள்ளமையும் மலையக அரசியல் அரங்கிலும் பொதுமக்கள் மத்தியிலும் பெரும் விவாதத்தைத் தோற்றுவித்துள்ளன.



200 ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டின் பொருளாதாரத்திற்காகத் தமது உதிரத்தை வியர்வையாகச் சிந்திய மலையக மக்களின் காணி உரிமை, வீடமைப்பு மற்றும் வாழ்வாதாரப் பாதுகாப்பு ஆகியன உறுதிப்படுத்தப்படாமல் மீண்டும் கம்பனிகளுக்குக் காணிகளைத் தாரைவார்க்கக் கூடாது என்ற குரல் தற்போது வலுப்பெற்றுள்ளது.

1825ஆம் ஆண்டளவில் பிரித்தானிய ஆட்சியாளர்களால் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட மலையக மக்கள், காடுகளை அழித்து தேயிலை மற்றும் இறப்பர் பெருந்தோட்டங்களை உருவாக்கினர்.

1970களில் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட தோட்டங்கள், 1990களின் ஆரம்பத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் காரணமாகத் தனியார் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு 50 ஆண்டுகாலக் குத்தகைக்கு வழங்கப்பட்டன.

அன்று தனியார் தனிநபர்களுக்கு வழங்காமல் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டதால், தோட்ட மக்களின் குடியிருப்புகளும் வழிபாட்டுத் தலங்களும் பாதுகாக்கப்பட்டதாகச் சில தரப்பினர் வாதிட்டாலும், கடந்த மூன்று தசாப்த காலக் கம்பனி நிர்வாகத்தில் மலையக மக்களின் வாழ்க்கைத் தரமோ காணி உரிமையோ எதிர்பார்த்த அளவிற்கு முன்னேறவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

இன்னமும் பத்துப் பன்னிரண்டு அடி லயன் அறைகளுக்குள் முடங்கிக் கிடக்கும் மலையக மக்களுக்கு, சொந்தமாக ஒரு துண்டு நிலம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

இத்தகைய பின்னணியிலேயே, 2027ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட விவாதங்கள் மற்றும் தொழிற்சங்க மாநாடுகளில் ஜனாதிபதியும் மலையக அரசியல் தலைவர்களும் முன்வைத்துள்ள கருத்துகள் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, கொழும்பில் நடைபெற்ற தொழிற்சங்க தேசிய மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, 2042ஆம் ஆண்டுடன் நிறைவடையவுள்ள பெருந்தோட்டக் கம்பனிகளுடனான குத்தகை ஒப்பந்தக் காலம் நிச்சயம் நீட்டிக்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிற்துறையை நவீனமயப்படுத்தி மேம்படுத்துவதும், தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதுமே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், கடந்த காலங்களைப் போன்று எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றி இம்முறை குத்தகை வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

பெருந்தோட்ட மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் விசேட சலுகைகளைப் பாதுகாக்கும் வகையிலான புதிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தமே தயாரிக்கப்படும் என்றும், அந்த நிபந்தனைகளுக்கு உடன்படும் கம்பனிகளுக்கு மாத்திரமே குத்தகைக் காலம் நீட்டிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு முழுமையடையவில்லை என்பதை ஏற்றுக்கொண்டுள்ள ஜனாதிபதி, அடுத்த ஆண்டில் கம்பனிகள் இது குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

மலையகத் தலைவர்களின் நிலைப்பாடுகளும் மக்களுக்கான கோரிக்கைகளும்

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் குறித்து மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைவர்களும் தொழிற்சங்கவாதிகளும் தமது அதிருப்தியையும் மக்களின் நலன் சார்ந்த ஆக்கபூர்வமான நிபந்தனைகளையும் முன்வைத்துள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், கம்பனிகளுக்குக் காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்குத் தாம் எதிர்ப்பில்லை என்று தெரிவித்தாலும், அதற்கு முன்னதாக மலையக மக்களுக்கு 20 பேர்ச் காணி உரிமை வழங்கப்பட்டு அவர்களின் பிரஜா உரிமை முழுமைப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.



“அட்டன் பிரகடனத்தில்” வாக்குறுதியளிக்கப்பட்ட தரிசு நிலங்கள் இளைஞர்களுக்கு இன்னும் வழங்கப் படவில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், தோட்ட மக்களின் அரசியல், கலாசார மற்றும் நிர்வாக விடயங்களில் கம்பனிகள் தலையிடுவதை நிறுத்தி, அவர்களைப் பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவகர் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

மேலும், குத்தகை தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள குழுவில் மலையகப் பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும், 200 ரூபா சம்பள அதிகரிப்பைச் சம்பள நிர்ணய சபை ஊடாக வர்த்தமானிப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், குத்தகை நீட்டிப்பு விவகாரத்தில் அரசாங்கம் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது என்றும், தொழிற்சங்கங்களுடன் கட்டாயம் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மருதன் ராம்

மலையக மக்களுக்குக் குறைந்தபட்சம் 10 பேர்ச் காணி உரிமையும், பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான காணிகளும் சட்டபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், தரிசு நிலங்களை மலையக இளைஞர்களின் சுயதொழில் முயற்சிகளுக்காக வழங்க வேண்டும் என்றும், டித்வா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு கூடாரங்களில் வாழும் மக்களுக்கு உடனடியாக வீடுகளை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



மறுபுறம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வே. இராதாகிருஷ்ணன், 1992ஆம் ஆண்டு குத்தகை வழங்கப்பட்ட பின்னர் தோட்ட நிர்வாகங்களால் ஏற்பட்ட அட்டூழியங்கள் மற்றும் கோயில்கள், வீடுகள் உடைக்கப்பட்டமை போன்ற கசப்பான சம்பவங்கள் மீண்டும் நிகழாதவாறு ஒப்பந்தம் அமைய வேண்டும் என்று எச்சரித்துள்ளார்.

தோட்டங்களை மாத்திரம் கம்பனிகளுக்குக் குத்தகைக்கு வழங்கிவிட்டு, அங்கு வாழும் மக்களின் பிரச்சினைகளை அரசாங்கம் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், பெருந்தோட்டங்களில் காணப்படும் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் தரிசு நிலங்களை முதலில் வேலையில்லாத தோட்ட இளைஞர்களுக்கு வழங்க வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தலை நடத்தி மக்களின் அதிகாரத்தைப் பகிர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், குத்தகை ஒப்பந்தத்தை நீட்டிப்பதற்கு ஆறு முக்கிய நிபந்தனைகளைக் கட்டாயமாக்க வேண்டும் என்று முன்மொழிந்துள்ளார்.

1.தொழிலாளர் குடியிருப்புகளைச் சுற்றியுள்ள 25 ஹெக்டேர் காணிகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து, ஏனைய காணிகளைப் பிரதேச செயலகத்தின் கீழ் வர்த்தமானிப்படுத்திய பின்னரே குத்தகைக்கு வழங்க வேண்டும்.

2. குத்தகைத் தொகையை ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை சந்தை மதிப்பீட்டிற்கு ஏற்ப மறுமதிப்பீடு செய்து அதிகரிக்க வேண்டும்.

3. தொழிலாளர் சம்பளத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை என்பதற்குப் பதிலாக, ஆண்டுதோறும் அதிகரிக்கும் ஏற்பாட்டை ஒப்பந்தத்தில் இணைக்க வேண்டும்.

4. உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ள தரிசு நிலங்களைக் கம்பனிகளிடமிருந்து மீட்டு, தோட்டப்புற இளைஞர், யுவதிகளுக்கு வழங்க வேண்டும்.

5. சம்பள நிர்ணயப் பேச்சுவார்த்தைகளில் தொழில் அமைச்

தொடர்ச்சி: பக்கம் 20



செல்வி
ரேணுகா இன்பக்குமார்
வழக்கறிஞர்
நியூசவுத்வேல்ஸ், அவுஸ்திரேலியா

மதிப்பிற்குரிய மாவீரர்களின் குடும்பத்தினரே, தாய்மார்களே, தந்தையர்களே, தமிழீழ வரலாற்றைக் கண்ணால் கண்ட தலைமுறையினரே, மற்றும் என்னுடன் வாழும் ஈழத் தமிழ் இளைய தலைமுறையினரே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

தமிழீழத்தில் இனப்படுகொலை உச்சமடைந்த காலத்திலிருந்து பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று, நினைவுச் சுடருக்கு முன்னால் நிற்கும் நாம், இந்த பதினேழு ஆண்டுகளை வெறும் வரலாற்றை நினைவு கூர்வதில் மட்டுமே கழித்தோமா, அல்லது அந்த வரலாற்றைக் காத்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல உண்மையாகவே நம்மைத் தயார்படுத்திக் கொண்டோமா என்று நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டும்.



மாவீரர்களைப் பற்றிப் பேசும்போது, நாம் ஒரு குறிப்பிட்ட தலைமுறையைப் பற்றிப் பேசுகிறோம். அவர்களின் இளமைக்காலம், தங்கள் தாயகத்தின் அரசியல் சூழலால் முழுமையாக ஆட்கொள்ளப்பட்டிருந்தது. ஒடுக்கு முறை, இடப்பெயர்வு மற்றும் தமிழர்களின் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட சூழல் ஆகியவை அவர்களின் வாழ்க்கையை வடிவமைத்தன. ஆயுதப் போராட்டத்தில் அவர்கள் பங்கேற்ற விதம், தமிழீழ வரலாற்றில் ஒரு முக்கிய அத்தியாயமாக மாறியது.

அவர்களில் பலர் நம்முடைய அதே வயதினர். நாம் எந்தப் பல்கலைக்கழகத்திற்குச் செல்வது, எந்தத் தொழிலைத் தேர்ந்தெடுப்பது, நமக்கான எதிர்காலத்தை எப்படி அமைப்பது என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், அவர்களின் தலைமுறை, தங்கள் மக்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக இருந்த ஒரு சூழலை எதிர்கொண்டது.

அந்த வரலாற்றை நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். மாவீரர்களை வெறும் புகைப்படங்களாக மட்டும் சுருக்கி, ஆண்டுக்கு ஒருமுறை காட்சிப்படுத்துவது, அந்தப் புகைப்படங்களுக்குப் பின்னால் இருந்த மனிதர் கள், குடும்பங்கள் மற்றும் அரசியல் சூழல்களைப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை இளைய தலைமுறைக்கு மறுப்பதாகிவிடும்.

மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரை ஒன்றில், "ஆயிரக் கணக்கான தனிமனித வாழ்வுகள் வரலாற்றின் கருவ றைக்குள் சென்றுவிட்டன" என்று குறிப்பிட்டிருந்தார்.

தனிமனித வாழ்வுகள் எவ்வாறு ஒரு இனத்தின் கூட்டு வரலாற்று நினைவாக மாறுகின்றன என்பதையும், அந்த நினைவைப் பாதுகாக்கும் பொறுப்பு அடுத்தடுத்த தலைமுறைகளின் மீது எவ்வளவு பெரியதாக அமைகிறது என்பதையும் சிந்திக்க இந்த வார்த்தைகள் நம்மை அழைக்கின்றன.

இன்று, அந்தப் பொறுப்பு நம்முடையது.

இருப்பினும், நேர்மை, உறுதி, ஒழுக்கம், கலாச்சாரத்தின் மீதான மரியாதை மற்றும் பிறர் மீதான பொறுப்புணர்வு ஆகியவற்றைப் பற்றிப் பேசும்போது, இத்தகைய பண்புகளை நாம் நம் சமூகத்திற்குள்ளேயே கடைப்பிடிக்கிறோமா என்று சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

அமைப்பு ரீதியான கருத்து வேறுபாடுகள் காரணமாக, மற்றொரு தமிழருடன் ஒரே மேசையில் அமர்ந்து பேச முடியாத நிலையில், 'தேசிய ஒற்றுமை' பற்றிப் பேசுவதில் என்ன பயன்? நம் சமூகத்திற்குள்ளேயே பரப்பப்படும் தவறான தகவல்களைக் கண்டு மௌனம் காக்கும்போது, 'நேர்மை' பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது? கேள்விகளைக் கேட்பதற்காகவோ, மாற்று கருத்துகளை வெளிப்படுத்துவதற்காகவோ அல்லது ஏற்கனவே நிலைபெற்றுள்ள தலைமைத்துவத்திற்கு சவால் விடுப்பதற்காகவோ நம் சொந்த இளைஞர்களை நாம் அவமானப்படுத்தும்போது, 'கலாச்சார மரியாதை' குறித்துப் பேசுவதில் என்ன பயன்?

நமக்குள்ளேயே ஒருவருக்கொருவர் கண்ணி யத்தை மறுத்துவிட்டு, சர்வதேச அளவில் நம் மக்களுக்காக கண்ணியத்தைக் கோர முடியாது.



நமது கலாச்சாரம் என்பது நமது நடத்தையில் வெளிப்பட வேண்டும்; பெரியவர்களிடம் நாம் காட்டும் மரியாதையிலும், பெண்களை நாம் நடத்தும் கண்ணியமான முறையிலும், பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களிடம் நாம் காட்டும் கருணையிலும், மற்றவர்களின் மனிதத்தன்மையை அங்கீகரிப்பதிலும் அது பிரதிபலிக்க வேண்டும். நமது அரசியல் அடையாளத்துடன் நேர்மையும் இருக்க வேண்டும்; ஏனெனில், நேர்மை இல்லையென்றால், எவ்வளவு வலிமையான அரசியல் சொல்லாடலும் அர்த்தமற்றதாகி விடும்.

இன்று, நான் மூத்த தலைமுறையினரிடம் நேரடியாகப் பேச விரும்புகிறேன்.

பதினேழு ஆண்டுகளாக, இளைஞர்களே தமிழ் ஈழத்தின் எதிர்காலம் என்று நாம் மீண்டும் மீண்டும் கேட்டு வருகிறோம். ஆனால், அந்த எதிர்காலத்திற்காக எங்களில் எத்தனை பேரை நீங்கள் உண்மையாகத் தயார்படுத்தியுள்ளீர்கள்?

உங்களில் எத்தனை பேர் உங்கள் பிள்ளைகளுடன் அமர்ந்து, நமது தாயகத்தின் அரசியல் வரலாற்றை அவர்களுக்கு விளக்கியுள்ளீர்கள்? உங்கள் வாழ்நாளுக்குப் பிறகும் அவை பயன்படும் வகையில், உங்கள் அனுபவங் களை எத்தனை பேர் ஆவணப்படுத்தியுள்ளீர்கள்? கல்வித் திட்டங்களை உருவாக்கியவர்கள், இளம் அரசியல் பிரதிநிதிகளை வளர்த்தெடுத்தவர்கள் அல்லது இளைஞர் களிடம் உண்மையான முடிவெடுக்கும் பொறுப்புகளை ஒப்படைத்தவர்கள் உங்களில் எத்தனை பேர்?

பிள்ளைகளை மாவீரர் நாளுக்கு அழைத்துச் சென்று, அவர்கள் கைகளில் பூக்களைக் கொடுத்துவிட்டு, அவர்களுக்கு முன்னால் இருக்கும் வரலாற்றின் ஆழத்தையும் முக்கியத்துவத்தையும் அவர்கள் புரிந்துகொள்வார்கள்



என்று எதிர்பார்ப்பது போதாது.

அரசியல் ரீதியாக நீங்கள் கல்வி புகட்டத் தவறிய ஒரு தலைமுறையிடம், அரசியல் உணர்வை மட்டும் எதிர்பார்ப்பது எப்படிச் சரியாக இருக்கும்?

மூத்த தலைமுறையினரிடம் இருக்கும் அறிவு, ஒருமுறை இழக்கப்பட்டுவிட்டால் மீண்டும் பெற முடியாத ஒன்று. எங்கள் தலைமுறை வெறும் புத்தகங்களில் மட்டுமே வாசிக்கக்கூடிய பல நிகழ்வுகளை, நீங்கள் நேரில் கண்டவர்கள். இன்று நினைவுச் சின்னங்களில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ள பல மனிதர்களை நீங்கள் நேரில் அறிந்திருந்தீர்கள். தமிழ் ஈழத்தின் அரசியல் மாற்றங்களை நீங்கள் நேரில் அனுபவித்தீர்கள்; நமது மக்கள் உலகம் முழுவதும் குடியேற வேண்டிய கட்டாயத்தை உருவாக்கிய சூழலை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த அறிவு உங்கள் தனிப்பட்ட சொத்து அல்ல. அது நமது கூட்டு வரலாற்றின் ஒரு பகுதி; அது உங்களோடு மறைந்துவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு.

நமது வரலாற்றை உங்களோடு சேர்த்துச் சமாதிக்குக் கொண்டு சென்றுவிடாதீர்கள்.

மாவீரர்களைப் பற்றி, தனிமனிதர்களாக அவர்களிடம் பேசுங்கள். அவர்களின் குடும்பங்கள், ஆளுமைகள், கனவுகள் மற்றும் அவர்களின் முடிவுகளை வடிவமைத்த சூழல்கள் குறித்து எங்களிடம் பகிருங்கள். அவர்களின் கடிதங்கள், புகைப்படங்கள் மற்றும் வரலாற்று ஆவணங்களைப் பாதுகாத்து வையுங்கள். உயிர் பிழைத்தவர்களின் அனு பவங்களை ஆவணப்படுத்துங்கள்; இதன் மூலம், நமது தாயகத்தைப் பற்றிய சிதறிய தகவல்களைத் தாண்டி, முழுமையான வரலாற்றை அறிந்துகொள்ளும் வாய்ப்பை எங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுங்கள்.

ஆனால், எங்களுக்குக் கல்வி புகட்டுவதைத் தாண்டி, எங்களை நம்பவும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

நமது புலம்பெயர் சமூகத்தில் உள்ள மிகப்பெரிய முரண்பாடுகளில் ஒன்று இதுதான்: இளைஞர்களின் தலைமைத்துவத்தைப் பற்றி நாம் இடைவிடாது பேசுகி றோம்; அதே சமயம், இளைஞர்களின் பொறுப்பு

தொடர்ச்சி: பக்கம் 19



நாம் மனரீதியாகச் சிதைந்து கொண்டிருக்கிறோம்

தமிழில்: **ஆர்தீகன்**

இது, டயல்-அப் இணைய வசதி இருந்த காலத்தில் ஒரு இணையப்பக்கம் திறக்க அதிக நேரம் எடுக்கும்போது ஏற்பட்ட அந்தப் பழைய பொறுமையின்மை குறித்த விஷயம் மட்டுமல்ல; வளைகுடாப் பகுதியில் நடக்கும் நிகழ்வுகள் குறித்த முழுமையான அறிக்கைகளைப் படிப்பதற்குப் பதிலாக, அதன் சுருக்கத்தை மட்டும் கேட்டுப் பெறும் பழக்கம் என்பதும் மட்டுமல்ல.



தற்போதைய சிக்கல் வேறானது: காலத்தின் ஓட்டத்தையே சுருக்க வேண்டும் என்ற ஒரு திட்டமிட்ட முயற்சி இதில் அடங்கியுள்ளது.

காணொளிகளை 1.5 மடங்கு அல்லது 2 மடங்கு வேகத்தில் இயக்கும் வசதி, இந்த காலத்தின் அடையாள மாகவே மாறிவிட்டது. சமூக ஊடகங்கள் மற்றும் ஸ்ட்ரீமிங் தளங்கள் வழங்கும் தொடர்ச்சியான தூண்டுதல்களுக்குப் பழகிப்போனவர்களுக்கு, இயல்பான வேகத்தில் பேசப்படும் பேச்சு, திரையரங்கில் பார்க்கும் திரைப்படம், நேரடி விரிவுரை அல்லது நேருக்கு நேர் உரையாடல் போன்றவை மிக மெதுவாகவும், சலிப்பைத் தருவதாகவும் தோன்றுகின்றன. 'உடனடித் தன்மை' (immediacy) என்பது ஒரு தொழில்நுட்பச் சிறப்பம்சமாக இல்லாமல், அடிப்படைத் தேவையாகவே மாறிவிட்டது.



காண்பது அல்லது கேட்பது என்பது, மிகக் குறுகிய காலத்தில் தகவல்களைப் பிரித்தெடுக்கும் ஒரு இயந்திரத்தனமான செயலாக மாறும்போது, நாம் ஒரு பொறியில் சிக்கிக்கொள்கிறோம்; அதுதான் 'உற்பத்தித் திறன் குறித்த மாயை'.

ஒரே நேரத்தில் மூன்று காணொளிகளைப் பார்த்து நேரத்தைச் சேமிப்பதாக நாம் நினைத்தாலும், அது நமக்கு ஓய்வையோ அல்லது சிந்திப்பதற்கான இடத்தையோ தருவதில்லை; மாறாக, மேலும் பல மேலோட்டமான உள்ளடக்கங்களை நுகர்வதற்கு மட்டுமே கூடுதல் நேரத்தை உருவாக்கித் தருகிறது.

வேகப்படுத்தப்பட்ட சொற்களை மூளையால் சிறிது காலம் புரிந்துகொள்ள முடியும் என்றாலும், அதன் விளைவாக மனச்சோர்வு ஏற்படுகிறது. மேலும், கேட்ட விஷயங்களை நீண்டகால நினைவாற்றலில் சேமித்து வைப்பதற்கும், காரண-காரியத் தொடர்புகளைப் புரிந்துகொள்வதற்கும் அவசியமான 'அமைதியான இடைவெளிகள்' நமக்குக் கிடைக்காமல் போகின்றன.

ஆழமான பகுப்பாய்வுத் திறன் என்பது ஒரு தசை போன்றது. நமது உயிரியல் திறன் மாறாமல் இருந்தாலும், நீண்ட கட்டுரைகளைப் படிப்பதன் மூலமோ அல்லது ஒரு விஷயத்தில் நீண்ட நேரம் கவனத்தைச் செலுத்துவதன் மூலமோ அந்தத் திறனுக்குப் பயிற்சி அளிக்கத் தவறினால், நமது மன உறுதி குறையத் தொடங்குகிறது. ஆழமான சிந்தனை, ஒரு வாதத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுதல், ஒரு முழு புத்தகத்தை வாசித்து முடித்தல் போன்றவற்றுக்குப் பதிலாக, நாம் இணையத்தில் மேலோட்டமாகத் தேடுவதையும், அடிக்கடி பணிகளை மாற்றிக்கொண்டே இருக்கும் ஒரு பதற்றமான பழக்கத்தையும் கைக்கொள்கிறோம்.

சுருக்கங்கள் மற்றும் தேடல் கருவிகளுக்கான உடனடி அணுகல், அறிவு இருப்பது போன்ற ஒரு மாயையையும் உருவாக்குகிறது. ஒரு முப்பது வினாடிக் குறிப்பை மேலோட்டமாகப் படித்ததாலேயே, பல அடுக்கு புவிசார் அரசியல் நெருக்கடிகளைப் புரிந்துகொண்டுவிட்டதாக நாம் நினைக்கிறோம்.

தவறான தகவல்களுக்கும், சரி தவறு, அல்லது நாயகர்கள் வில்லன்கள் எனப் பிரிக்கப்பட்ட இருமைப் பார்வைகளுக்கும் நாம் எளிதில் ஆளாகிறோம்; ஆதாரங் களைச் சரிபார்க்கவோ, கண்ணோட்டங்களை ஒப்பிடவோ, அல்லது முரண்பாடுகளை எதிர்கொள்ளவோ நமக்கு பொறுமை இருப்பதில்லை.



இந்த மனச் சோர்வு ஸ்மார்ட்போன் திரையோடு நின்றுவிடுவதில்லை; அது நாம் அரசியலையும் சமூகத் தையும் பார்க்கும் விதத்திலும் நேரடியாகப் பரவுகிறது. விரிவான தர்க்க முறைகளைப் பின்பற்றும் பழக்கத்தை இழப்பவர்கள், இயல்பாகவே கட்டமைப்பு சார்ந்த பிரச்சனை களுக்கு உடனடித் தீர்வுகளைக் கோரத் தொடங்குகிறார்கள்.

பொதுப் பாதுகாப்பு, பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவை ஆழமான வரலாற்று வேர்களைக் கொண்டுள்ளன, மேலும் அவற்றுக்கு நடுத்தர மற்றும் நீண்ட காலக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

ஆயினும், பொது விவாதம் அல்காரிதமிக் தர்க் கத்தால் விழுங்கப்பட்டுள்ளது: ஒரு முப்பது வினாடிக் காணொளி, ஒரு பரபரப்பான தலைப்பு அல்லது ஒரு விரைவான பதிவில் பொருந்தாத எதுவும் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிடுகிறது.

செயல்முறைகள், நுணுக்கங்கள் மற்றும் உண் மையான செலவுகளை விளக்க முயற்சிப்பவர்கள், குறுக்குவழிகள், உடனடித் தீர்வுகள் மற்றும் 'நாம்-அவர்கள்' என்ற மாயாஜாலத் தீர்வுகளை விற்பவர்களிடம் தங்கள் செல்வாக்கை இழக்கிறார்கள்.

நடைமுறையில், இது உலகளவில் ஒரு தலைகீழ் தலைமைத் தேர்வைத் தூண்டுகிறது. டிஜிட்டல் சூழல், உடனடி சீற்றத்தையும் எளிய சொல்லாட்சியையும் கையாள் பவர்களுக்கு வெகுமதி அளிக்கிறது; தொழில்நுட்பத் தயாரிப்போ அல்லது நிர்வாக அனுபவமோ இல்லாத நபர்களுக்கு அதிகாரத்தின் கதவுகளைத் திறந்துவிடுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், இந்தத் தலைவர்கள் நிரந்தரப்பிரச்சாரமுறையில்தொடர்ந்துசெயல்படுகிறார்கள். உலாவி மற்றும் குறும்படங்களின் அதே இயக்கவியலில் சிக்கிக்கொண்டு, பார்வையாளர்களை ஈடுபாட்டுடன் வைத்திருக்க தினசரி அறிவிப்புகள் மற்றும் பார்வைக்குத் தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் அவர்கள் ஆட்சி செய்கிறார்கள்; அதே நேரத்தில், முதிர்ச்சியடைந்து பலனளிக்கப் பல ஆண்டுகள் ஆகும் சீர்திருத்தங்களையும் கட்டமைப்புத் திட்டங்களையும் கிடப்பில் போடுகிறார்கள்.

ஜனநாயகத்திற்கும் புவிசார் அரசியலுக்கும் மெது வான சடங்குகள் தேவைப்படுகின்றன: நாடாளுமன்றப் பேச்சுவார்த்தை, சர்வதேச ஒப்பந்தங்கள், தொழில்நுட்ப உடன்படிக்கைகள்.



தெருக்களும் சமூக வலைத்தளங்களும் ஒரு தலைப் பட்சமான, உடனடி முடிவுகளைக் கோரத் தொடங்கும் போது, இந்த நிறுவனக் கட்டுப்பாடுகள் ஸ்திரத்தன்மைக்கான உத்தரவாதங்களாகக் கருதப்படுவது நின்று, வெறும் அதிகாரத்துவம் என்று நிராகரிக்கப்பட்டு, தாக்குதல்களின் இலக்குகளாக மாறுகின்றன.

இயங்குதளங்கள் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் செயல்படுவதால், இந்த நிகழ்வு உலகளாவிய அளவில் தன்னைத்தானே வளர்த்துக் கொள்கிறது.

மனக்கிளர்ச்சியாலும், அதீத எளிமைப்படுத்தலா லும் உந்தப்படும் அரசாங்கங்கள், உண்மையான பொரு ளாதார, சமூக மற்றும் இராஜதந்திர நெருக்கடிகளை உருவாக்குகின்றன. அவை, மேலும் அச்சத்தையும், அவசரத்தையும், உடனடி மீட்பர்களுக்கான தேவையையும் உருவாக்குகின்றன.

புரிந்துகொள்ள முயற்சி தேவைப்படும் எதையும் கூட்டாக மறுப்பது, உலகளாவிய நிர்வாகத்தைச் சிதைத்து, நாம் வாழும் உலகத்தைப் புரிந்துகொண்டு ஆளும் அடிப்படைத் திறனை நம்மிடமிருந்து பறிக்கிறது.

மேலும், ஆழ்ந்த சிந்தனையையோ அல்லது உடனடித் தீர்வையோ தற்போதைய நிலையுடன் நாம் குழப்பிக்கொள்ளக் கூடாது. முற்றிலும் இதற்கு நேர்மாறாக: சீர்திருத்தங்களுக்கு நேரம் எடுக்கும் ஆழ்ந்த சிந்தனை தேவைப்படுகிறது, ஆனாலும் உடனடி அரசியல் உறுதிப்பாடு அவசியமாகிறது.

Ms. Patricia Marins
படைத்துறை ஆய்வாளர்
X சமூகவலைத்தளம்



போர் மட்டுமே வளைகுடா நாடுகளிடம் உள்ள ஒரே தெரிவு

ஈரான் தனது ஏவுகணைகள் இடைமறிக்கப்படும் அபாயத்தைக் குறைக்கவும், இலக்குகளை அதிகத் துல்லியமாகத் தாக்கவும், தாக்குவதற்குச் சற்று முன்பு திசைமாறக்கூடிய போர்க்குண்டுகளுடன் மிகவும் சக்தி வாய்ந்த ஏவுகணை உந்துவிசை அமைப்புகளை இணைப் பதன் மூலம் தனது ஏவுகணைத் திறன்களை மேம்படுத்தி வருகின்றது.



இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை (IRGC), ஹஜ் காசிம் நடுத்தரத் தூரப் பாலிஸ்டிக் ஏவுகணையின் (MRBM) உந்துவிசை அமைப்பை, திசைமாறக்கூடிய மறு நுழைவு வாகனங்களைக் (MaRV) கொண்ட கைபர் ஷேக்கான், கைபர் ஷேக்கான்-2 மற்றும் ஃபத்தா-1 போர்க்குண்டுகளுடன் இணைக்கும் கலப்பின ஏவுகணை வகைகளை உருவாக்கியுள்ளது.

ஈரானிய ஊடக மதிப்பீடுகளின்படி, ஹஜ் காசிம் ஏவுகணையானது வலிமையான உந்துவிசை அமைப்பைக் கொண்டுள்ளது. இது அந்த ஏவுகணையை அதிகபட்ச இறுதி வேகத்தை அடைய உதவுகிறது. இதனால், ஏவுகணை தனது இலக்கை நெருங்கும்போது அதிக வேகத்தில் பயணிக்கிறது.இதன்காரணமாக, வான் பாதுகாப்பு அமைப்பு கள் எதிர்வினையாற்றுவதற்குக் குறைந்த நேரமே கிடைக் கிறது.மேலும்,தாக்கத்தின்போது ஏவுகணையின் விசையும் அதிகரிக்கிறது.



இதற்கிடையில், கைபர் ஷேக்கான், கைபர் ஷேக் கான்-2 மற்றும் ஃபத்தா-1 ஆகியவற்றின் MaRV அமைப்புகள், கலப்பின வகையின் இறுதிக்கட்டத்தில் அதன் பயணப் பாதையை மாற்றி, வான் பாதுகாப்பு அமைப்புகளைத் தவிர்க்கவும், இலக்குத் துல்லியத்தை மேம்படுத்தவும் உதவு கின்றன.

நவம்பர் 23 அன்று, IRGC-உடன் தொடர்புடைய ஊடகங் கள், கைபர் ஷேக்கான்-2 – ஹஜ் காசிம் வகையின் போர்க் குண்டில், தாக்குதலுக்குமுன்பாகப் பல துணை வெடி குண்டுகளைச் சிதறடிக்கும் கொத்துக்குண்டுகளை ஈரான் சேர்க்கக்கூடும் என்று தெரிவித்தன. இது ஏவுகணையை இடைமறிப்பதைக் கடினமாக்கி, அது இலக்குகளைத் தாக்கும் வாய்ப்பை அதிகரிக்கும்.

ஹஜ் காசிம், கைபர் ஷேக்கான்-2 மற்றும் ஃபத்தா-1 ஆகிய அனைத்தும் ஃபத்தே-110 ஏவுகணைக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதாலும், ஒத்த தொழில்நுட்பம் மற்றும் விநியோகச் சங்கிலிகளைப் பகிர்ந்துகொள்வதாலும், ஈரான் இந்தக் கலப்பின வகைகளை உற்பத்தி மற்றும் விநியோகச் சங்கிலிகளில்குறைந்தபட்ச மாற்றங்களைச் செய்தே தயாரிக்க வாய்ப்புள்ளது.

இத்தகைய தொழில்நுட்பம் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே பயன்பாட்டில் உள்ளது. தற்போது ஈரான் அதன் உற்பத்திச் செலவைக் குறைப்பதில் கவனம் செலுத்தி வருகிறது.

ஈரான் ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளதாகவும், இந்தத்துறையில் மேற் கத்திய நாடுகளைக் காட்டிலும் முன்னிலையில் இருப்ப தாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இவ்வாறு ஈரான் தன்னை அடுத்த போருக்குத் தயார்படுத்தி வருகையில், பஹ்ரைன் கடுமையான பொரு ளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து பல பில்லியன் டாலர் உதவி பெற்ற போதிலும், பஹ்ரைன் பெரும் கடன் சுமையில் சிக்கித் தவிக்கிறது.

தற்போது, ட்ரம்ப்புடன் இரண்டாவது முறையாக மோதலில் ஈடுபட்டுள்ள ஈரான், தனது நிலைப்பாட்டில் எவ்வளவு உறுதியாக இருக்கிறது என்பதை நாம் காண முடிகிறது. முன்னதாக, 'அயதுல்லாக்களின் ஆட்சி வீழுமா அல்லது இடைக்காலத் தேர்தல்களில் ட்ரம்ப் தோல்வி யடைவாரா – இதில் எது முதலில் நடக்கும்?' என்ற பந்தயத்தில் ஈரான் வெற்றி பெற்றது.

தற்போது இரண்டாவது மோதல் நீடிக்கிறது. வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (GCC) நாடுகளின் பொருளாதாரங்கள் – அவை எதிர்கொள்ளும் பொருளாதாரத் தடைகள் மற்றும் ஹோர்முஸ் நீரிணையில் நிலவும் உறுதியற்ற சூழல்காரணமாக – முதலில் வீழ்ச்சியடையுமா அல்லது ஈரானின் பொருளாதாரம் முதலில் வீழ்ச்சியடையுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் (IMF), 2026-ஆம் ஆண்டிற்கான பொருளாதாரக் கணிப்புகளை வெளி யிட்டுள்ளது. அதன்படி, மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி குறித்த முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி விகிதங்கள் வருமாறு: குவைத்: −16.7%, ஈராக்: −16.0%, கத்தார்: −15.6%, பஹ்ரைன்: −11.3%, ஈரான்: −7.6%, ஐக்கிய அரபு அமீரகம்: −3.9%, சவூதி அரேபியா: −3.3%.

வேல்ஸில் இருந்து அருஸ்

இவை அனைத்தும் பொருளாதார ரீதியாக ஒரு தரப்பை முடக்குவதற்கான முயற்சிகளாகவே உள்ளன. இதில் வளைகுடா நாடுகளுக்கு எந்த லாபமும் இல்லை;மாறாக, இழப்பு மட்டுமே மிஞ்சுகிறது.



இந்தச் சூழலிலும், ஈரான் முன்வைக்கும் நிபந் தனைகளின் அடிப்படையில் ட்ரம்ப் பேச்சுவார்த்தைக்கு வரப்போவதில்லை. குறிப்பாக, பல பில்லியன் டாலர் மதிப்பி லான மறுசீரமைப்புச் செலவுகளை ஏற்கும் பொறுப்பு வளைகுடா நாடுகளின் மீதே விழும் நிலை உள்ளது.

இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், ஈரானின் மறுசீரமைப்புச் செலவுகளை வளைகுடா நாடுகள் ஏற்றுக் கொண்டாலும், இஸ்ரேல் மீண்டும் போரைத் தொடங்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஏனெனில், இஸ்ரேலின் போர் நோக்கங்கள் எதுவும் இதுவரை நிறை வேறவில்லை.

மேலும், அனைத்துத் தரப்பினரும் ஓர் உடன் படிக்கைக்கு வருவதற்குத் தேவையான ஒருமித்த கருத்தோ, இராஜதந்திரச் சூழலோ அல்லது நிதி சார்ந்த நல்லெண்ணமோ தற்போது இல்லை.

எனவே, எதிர்காலத்தில் மீண்டும் மோதல் வெடிப்பதற்கான வாய்ப்புகளே அதிகமாகத் தெரிகின்றன. அதேசமயம், ட்ரம்ப் ஒரே நேரத்தில் இரண்டு முனைகளில் நெருக்கடி கொடுக்கிறார். சீனா மற்றும் பல நாடுகள் மீது புதிய வரிகள்விதிக்கப்படுகின்றன. ஈரானின் மறை முக வங்கி வலையமைப்பு மீதும் புதிய தடைகள் விதிக்கப் படுகின்றன. கருவூலத் துறை, எண்ணெய் வருவாயைக் கையாளும் இருபதுக்கும் மேற்பட்ட ஈரானியப் பணப் பரிமாற்ற நிறுவனங்கள் மற்றும் போலி நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுத்ததுடன், வெளிநாட்டு வங்கிகளின் நிதி இணைப்புத் துண்டிக்கப்படலாம் என்றும் எச்சரித்தது. சீனா மற்றும் பிற நாடுகள் மீது இந்த வாரம் புதிய வரிகள் விதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தடைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

ஈரானின் வெளிப்படையான எண்ணெய் ஏற்றுமதி கிட்டத்தட்ட பூஜ்ஜியமாக உள்ளது. ஆனால், ஒவ்வொரு சுற்றிலும் டேங்கர்களுக்கு இடையேயான பரிமாற்றங்கள் மற்றும் போலியானகண்காணிப்புச் சமிக்ஞைகள் போன்ற வழிமுறைகள்மூலம்வர்த்தகம் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும், ஈரானின் வெளியுறவு அமைச்சர் வேறு வழிகளைக் கண்டுபிடித்துக் கொள்வதாகக் கூறுகிறார். இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரே இலக்

தொடர்ச்சி: பக்கம் 19

ஐ.நா. தனது பொறுப்புகளை... தொடர்ச்சி...

மீறல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தவறுகள் புதிதாகக் கூறப்படுபவை அல்ல. ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் உள்ளக மீளாய்வுக் குழு ஏற்கனவே கண்டறிந்த விடயங்களையே இந்த அறிக்கை மீண்டும் நினைவூட்டுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் தரப்பில் இத் தகைய நிர்வாக மற்றும் செயற்பாட்டுத் தவறுகள் இடம்பெற்றிருந்தாலும், போரின்போது நிகழ்ந்த பாரதூரமான மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கும் குற்றவியல் வழக்குகளைத் தொடர்வதற்கும் இலங்கை அரசுக்கு உள்ள முதன்மைப் பொறுப்பை இது எவ்வகையிலும் குறைக்காது என்று அந்த அறிக்கை திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

பாரிய இராணுவத் தாக்குதலை எதிர்கொள்வதற் குத் தேவையான தயார்நிலையும் ஆற்றலும் மனிதாபி மான உதவி நடவடிக்கைகளில் இல்லை என்று 2006ஆம் ஆண்டுக்கு முன்னரே ஐ.நா. மதிப்பீடுகள் எச்சரித்திருந்தன.

மேலும், ஐ.நா. முகவர் அமைப்புகளையும் சர்வதேச நிறுவனங்களையும் வன்னியிலிருந்து வெளியேறுமாறு அரசாங்கம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, சர்வதேசப் பணியாளர்கள் வெளியேறினர்.

இது மனிதாபிமான உதவிகளைக் குறைத்ததுடன், நிலைமைகளைக் கண்காணிக்கும் சர்வதேசப் பிர சன்னத்தையும் இல்லாமற் செய்த ஒரு தீர்க்கமான திருப்பு முனையாக அமைந்தது.

அத்துடன், ஐக்கிய நாடுகள் சபையின் "11ஆவது நிவாரணத் தொடரணி" (Convoy 11) மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதும், அதன் நடவடிக்கைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டதும் இந்த அறிக்கையில் ஆராயப்பட்டுள்ள நான்கு முக்கிய சம்பவங்களில் ஒன்றாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் ... தொடர்ச்சி...

காணப்போகிறீர்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கிடையில், சாணக்க மாதுகொட கருத்துத் தெரிவிக்கையில், சபைக்குத் தலைமை தாங்கும் நிலையில் சில சொற்களை ஹன்சார்டில் பதிவு செய்வது தொடர்பான தீர்மானங்களை முன்வைக்க முடியும் என்றும், 'ஈழம்' என்ற சொல்லைப் பயன்படுத்துவது தொடர்பிலும் செயலாளர் குழு தீர்மானம் எடுக்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

மாவீரர்களின் தியாகத்தை... தொடர்ச்சி...

வேண்டுகோளாகவே இந்த உரை அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் 2009, மே 18ஆம் நாள் மௌனித்த பின்னர், 2026, மே 18ஆம் நாளுடன் 17 ஆண்டுகள் கடந்துள்ளன. எதிர்வரும் 2027, மே 18ஆம் நாளுடன் 18 ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஆனால், ஈழத்தில் ஏகோபித்த தலைவர் இல்லாமல், பல தமிழ்த் தேசியக் கட்சிகளில் உள்ளவர்கள் தாம்தான் தலைவர்கள் என வாயால் வடை சுட்டுக்கொண்டு, தேர்தல் அரசியலுக்காகவும் பதவி அரசியலுக்காகவுமே தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர்கின்றனர்.

அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் தலைமை அலுவலகங்களும் யாழ். மாவட் டத்தில்தான் (யாழ்குடாநாடு) உள்ளன. இதுவரை 10, கடந்த மாவீரர் வணக்க நாளிலும் கடந்த காலங்களி லும் மாவீரர்களை நினைவுகூராமல், அவர்களை அலட்சி யப்படுத்தி அசிங்கப்படுத்திய தமிழ்த் தேசியக் கட்சிகளில் உள்ள சிலரும், சந்தர்ப்பவாத அரசியலுக்காக மாவீரர்களை நினைவுகூர்ந்து படம் காட்டியதையும் இம்முறை காணமுடிந்தது.

கடந்த காலங்களில் பல அச்சுறுத்தல்களுக்கும் தடைகளுக்கும் மத்தியில் துயிலும் இல்லங்களில் கார்த் திகை 27ஆம் நாள் கடைப்பிடிக்கப்பட்டாலும், இந்த வருடம் ஓரளவு கெடுபிடிகள் இன்றி மக்கள் திரளாக வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் அமைந்துள்ள துயிலும் இல்லங்களுக்குச் சென்று தமது உணர்வுபூர்வமான வணக் கத்தைச் செலுத்தினர்.

வீரச்சாவைத் தழுவிய மாவீரர்கள் 2009, மே 18ஆம் நாள் வரை ஐம்பதாயிரம் வரையில் உயிர்நீத்துள்ளனர். 2008ஆம் ஆண்டு உத்தியோகபூர்வமாக வெளியிட்ட தரவின்படி, 1982 தொடக்கம் 2008, நவம்பர் 20ஆம் நாள் வரையும் 22,390 மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவியதாக விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பில் வெளியிடப்பட்டது.

அந்த விபரத்தில்:

வடமாகாணத்தைச் சேர்ந்த மாவீரர்கள்: 14,957 (ஆண்கள்: 10,834, பெண்கள்: 4,123)

கிழக்கு மாகாண மாவீரர்கள்: 7,083 (ஆண்கள்: 6,580, பெண்கள்: 503)

வடகிழக்கைச் சாராதவர்கள்: 350 (ஆண்கள்: 282, பெண்கள்: 68)

மொத்தம்: 22,390 மாவீரர்கள்.

ஆனால், 2008, நவம்பர் 20 தொடக்கம் 2009, மே 18 வரை ஆறு மாதங்கள் கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்கள் முழுவதும் உக்கிரமான போர் இடம்பெற்றது. இறுதியில் முள்ளிவாய்க்கால், நந்திக்கடல் வரை, 2009, மே 18ஆம் நாள் போர் மௌனிக்கும் வரை அந்த ஆறு மாதங்களில் மட்டும் ஏறக்குறைய 20,000 மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவியிருக்கலாம் என நம்பப்படுகிறது. அவர்களுடைய சரியான தொகை இதுவரை தெரியவில்லை. இதுவரை உத்தியோகபூர்வமாக எவரும் வெளியிடவில்லை.

2008, நவம்பர் 20ஆம் நாள் விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்த 22,360 மாவீரர்களுடன் சேர்த்து, மொத்தமாக 50,000 மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவிய தாகச் சில ஊடகங்களில் தகவல்கள் வெளிவந்தன. இதையே பலரும் உச்சரிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் மௌனத்திற்குப் பின்னர், 17 வருடங்களாக மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்திவரும் நாம், அவர்களுடைய கனவு நினைவேற வேண்டுமானால், குறைந்தபட்சம் சிதறிக்கிடக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஈழத்தில் ஒற்றுமையாக ஓர் அணியாக, ஒரே குரலில் சர்வதேசத்தை நோக்கி அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைக்கக்கூடிய வகையில் செயல்பட வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமைப்படவில்லை.

2026, கார்த்திகை 27ஆம் நாள் மாவீரர் வணக்க நாள் கடந்துவிட்ட போதும், தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையாகச் செயல்படுவதற்கு இனியாவது முயற்சி எடுப்பார்களா என்பதை எதிர்வரும் 2027ஆம் புத்தாண்டில் பார்ப்போம். அப்படி ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் செயல்படுவதே மாவீரர்களுடைய தியாகத்துக்குச் செலுத்தும் நன்றியாகும்.

• • •

போருக்கு தயாராகின்றது... தொடர்ச்சி...

தாக்குதல்களை நடத்தத் தயார் என்று மாஸ்கோ ஏற்கனவே நேட்டோவை எச்சரித்திருந்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ரஷ்யா தனது கடல்வழி எண்ணெய் ஏற்றுமதியில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவற்றை பால்டிக் கடல் வழியாகவே கொண்டு செல்கிறது. ரஷ்யாவின் "நிழல் கப்பற்படை" (shadow fleet) சார்ந்த எண்ணெய் டேங்கர்களை இடைமறிக்க மேற்கத்திய நாடுகள் எடுத்து வரும் முயற்சிகளால், அப்பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது.

நினைவுகளின் நெருப்பின் ... தொடர்ச்சி...

ஒரு காலத்தில் தமது இளமையையும், உடல் வலிமையையும், வாழ்க்கையின் பல சாத்தியங்களையும் இழந்தவர்கள் இன்று நம்மிடையே வாழ்கின்றனர். சிலர் உடல் உறுப்புகளை இழந்துள்ளனர். சிலர் நிரந்தர உடல் பாதிப்புகளுடன் வாழ்க்கையைத் தொடர்கின்றனர். சிலர் வெளியில் சொல்ல முடியாத மனக்காயங்களுடன் வாழ் கின்றனர். அவர்களின் வாழ்க்கை, போர் என்பது கடந்த காலத்தில் முடிந்த ஒரு நிகழ்வு மட்டுமல்ல என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

போர் முடிவடைந்ததாக அறிவிக்கப்படும் ஒரு நாளால், போரின் அனைத்து வலிகளும் முடிவடைந்து விடுவதில்லை. காணாமல் போனவர்களைத் தேடும் குடும்பங்களின் கேள்விகள், உயிரிழந்தவர்களின் நினைவுகளைத் தாங்கி வாழும் உறவுகளின் துயரங்கள், இடப்பெயர்வால் சிதைந்த வாழ்க்கைகள், இழந்த வாழ் வாதாரங்கள், தீர்க்கப்படாத நீதிக்கான கோரிக்கைகள் ஆகியவை காலத்தின் ஓட்டத்தில் தொடர்ந்து வாழ்கின்றன. இவை அனைத்தும் ஒரு சமூகத்தின் நினைவில் இடம்பெற வேண்டிய மனிதநேயக் கதைகளாகும்.

அவர்களின் பார்வையில் இன்றைய சமூகத்தின் மாற்றங்கள் பல கேள்விகளை எழுப்பக்கூடும். உலகமயமாக் கல், சமூக ஊடகங்கள், நவீன வாழ்க்கைமுறை, பொழுது போக்கு கலாசாரம், வெளிநாட்டு வாழ்க்கையின் மீதான ஈர்ப்பு ஆகியவற்றால் வேகமாக மாறிவரும் இன்றைய தலைமுறையின் வாழ்வியல், முன்னைய தலைமுறைகளின் அனுபவங்களிலிருந்து எவ்வளவு தூரம் விலகியுள்ளது? வரலாற்றின் வலிகளை அறிந்து வளர்கிறோமா? அல்லது அந்த வலிகள் நம்முடைய அன்றாட வாழ்க்கையின் ஓரத்தில் மறைந்து போகின்றனவா?

இன்றைய இளைஞர்கள் இசையைக் கேட்பதும், நடனமாடுவதும், திரைப்படங்களைப் பார்ப்பதும், வெளி நாடுகளுக்குச் செல்ல விரும்புவதும், புதிய வாழ்க்கை முறைகளை ஏற்றுக்கொள்வதும் இயல்பான மனித வாழ்வின் பகுதிகளே. ஒரு தலைமுறை துயரத்துக்குள் வாழ்ந்ததால், அடுத்த தலைமுறை துயரத்தையே வாழ்வின் அடையாளமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூற முடியாது. ஆனால் சுதந்திரமாக வாழ்வதற்கான விருப்பம், நவீன வாழ்க்கையை அனுபவிப்பதற்கான உரிமை ஆகியவற்றோடு, நமது வரலாற்றைப் புரிந்துகொள்ளும் பொறுப்பும் இணைந்திருக்க வேண்டுமா என்ற கேள்வியை சமூகமாக நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்றைய தலைமுறைக்கு கடந்த காலத்தைப் பற்றிய அறிவு வெறும் நினைவுநாள் உரைகளால் மட்டும் உருவாகாது. வரலாற்றை நேர்மையாகப் பேச வேண்டும். போரின் காரணங்கள், அதன் விளைவுகள், உயிரிழப்புகள், மனித உரிமை மீறல்கள், குடும்பங்களின் இழப்புகள், போருக்குப் பிந்தைய வாழ்வின் சவால்கள் ஆகியவற்றைப் பேச வேண்டும். முன்னாள் போராளிகள், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள், இடம்பெயர்ந்த மக்கள், உயிர் தப்பியவர்கள் ஆகியோரின் அனுபவங்கள் சமூகத்தின் வரலாற்று நினைவில் இடம்பெற வேண்டும். எதற்காக அந்தத் தியாகங்கள்? – மறந்துவிடுகிறோமா நமது வரலாற் றின் வலியை?

நினைவுகூரல் என்பது மலர் தூவுவதிலும் சுடர் ஏற்றுவதிலும் மட்டும் முடிவடைய வேண்டியதில்லை. "நினைவுகளிலிருந்து பொறுப்புணர்வை உருவாக்குவதிலும், வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதிலும், போரால் பாதிக்கப்பட்ட மனிதர்களின் வாழ்க்கையை மதிப்பதிலும் அதன் பொருள் விரிவடைகிறது."

ஒரு தலைமுறை தமது கனவுகளையும் நம்பிக்கைகளையும் ஒரு போராட்டத்தின் வழியே வெளிப்படுத்தியது. அடுத்த தலைமுறை அந்த வரலாற்றை எவ்வாறு புரிந்துகொள்கிறது? அதன் வலிகளை எவ்வாறு அணுகுகிறது? அதன் மனிதநேயப் பாடங்களை எவ்வாறு தன் வாழ்வில் எடுத்துக்கொள்கிறது? இந்தக் கேள்விகளுக்கு விடை தேடுவது, ஒரு நினைவுநாளின் உணர்வைத் தாண்டி, ஒரு சமூகத்தின் எதிர்காலச் சிந்தனையோடு தொடர்புடையதாகும்.

கார்த்திகை 27 அன்று நினைவுகூரப்படுவது உயிரிழந்தவர்களின் பெயர்கள் மட்டுமல்ல. அவர்கள் வாழ்ந்த காலத்தின் கனவுகள், நம்பிக்கைகள், முரண்பாடுகள், இழப்புகள் மற்றும் அந்த வரலாற்றின் இன்னும் தீராத கேள்விகளுமாகும்.

நல்லவேளை... நான் போராளி அல்ல! நான் ஒரு இனத்துவேசி அல்ல... நான் ஒரு போராளியும் அல்ல... அதனால்தான் கொஞ்சமேனும் நிம்மதியாய் வாழ்கிறேன் ஈழத்தில்... அச்சச்சோ... மன்னிக்கவும், இலங்கையில்!

அதனால்தானோ என்னவோ, ஓரளவேனும் இப்பி றப்பில் பெருமிதம் கொள்கிறேன் போல... என்னவென்று தெரியவில்லை... நல்லவேளை, நான் எழுபது எண்பதுகளில் பிறக்கவில்லை!

என் இனம் தலைநிமிர வேண்டும் என்று கனவு காணவில்லை... தொண்ணூறுகளின் போர்ச்சூழலை என் கண்களால் கண்டதுமில்லை...

என் மக்கள் பரிதாபத்திற்குரியவர்கள் அல்ல, என்று வீரத்தொனியில் பேசித் திரிந்ததுமில்லை... ஆயுதம் ஏந்தி, தனிநாடு வேண்டுமெனக் கோரி, தேசம் வேண்டுமெனக் குரல் கொடுத்து, வீரச் செருக்குடன் வீதிகளில் நடந்தது மில்லை...

புறமுதுகு காட்டாமல், மார்புதுளைத்த குண்டுக ளோடு, காயங்களைச் சுமந்து, போர் மண்ணில் வீழ்ந்தது மில்லை... நான் வீரனுமில்லை... என் அண்ணன், என் அக்கா என எவரையும் அந்தப் போராட்டத்தின் உறவாகக் கொண்டாடியதுமில்லை...

நல்லவேளை... பிழைத்துக்கொண்டேன்! கனவுக ளைத் தேடி கானகம் சென்றதில்லை... காடுகளின் வழியில் காவல் தெய்வங்களாய் வாழ்ந்ததில்லை...

உணவுக்காக ஒளிந்திருந்ததில்லை... பனை வடலி களுக்குள் பதுங்கிக் கிடந்ததில்லை... தாயகம் காக்கவெனக் கிளம்பி, தாயை நடுத்தெருவில் நிறுத்திவிட்டுச் சென்றது மில்லை...

ஒருவேளை... நானும் அப்படிச் சென்றிருந்தால், என்ன வாகியிருப்பேன்?

இன்று கனவுகளை மறந்து, களியாட்டங்களில் காலம் கழிக்கும் இந்தச் சமூகத்தின் மறதியைப் பார்த்து, என் மனம் எவ்வளவு வெடித்திருக்கும்?

மேல்நாட்டு மோகத்தின் மயக்கத்தில், தன் வரலாற் றின் வேர்களை மறந்து, தன் இனத்தின் நினைவுகளைத் தொலைத்து, வெறும் கேளிக்கைகளுக்குள் தன்னைத் தொலைத்துக் கொண்டிருக்கும் இந்தத் தலைமுறையைப் பார்த்து, எத்தனை ஆதங்கங்கள் என்னுள் கொந்தளித் திருக்கும்?

ஒரு காலத்தில் சுதந்திரத் தாகமென நம்பிய கனவுக்காக, தம் இளமையைத் துறந்து, தம் உடல்களைத் தியாகத்தின் சாட்சிகளாக்கி, தம் வாழ்க்கையைப் போரின் நெருப்பில் தொலைத்தவர்களின் நினைவுகள் இன்று வெறும் கார்த்திகைச் சுடராக மட்டும் சுருங்கிப் போவதைப் பார்த்து, என் இதயம் எவ்வளவு நொறுங்கியிருக்கும்?

அவர்களின் தீராத கனவுகள்... தணியாத ஏக்கங்கள்... தணலிடை வெந்தும், வேகாததுமாய் எஞ்சிய உடல்கள்... அவர்களின் விருப்பங்கள்... அவர்களின் நம்பிக்கைகள்...

அனைத்தும் நீறுபூத்த நெருப்பாய் என்னுள் உறைந் திருக்க, அந்த நெருப்பின் வெப்பத்தில் நான் என்னையே கேள்விக்குள்ளாக்கியிருப்பேனோ?

இன்று நாம் வாழும் வாழ்க்கைக்காக, நாம் இன்று சுவாசிக்கும் சுதந்திரத்திற்காக, நாம் இன்று நடமாடும் இந்த மண்ணுக்காக,

ஒரு காலத்தில் வீழ்ந்தவர்களின் குடும்பங்கள் இன்று ஒரு தென்னம்பிள்ளைக்காகவும், அரிசிக்காகவும், உதவிக்காகக் கைநீட்டி நிற்பதைப் பார்த்து...

என் புத்தி பேதலித்திருக்குமோ? நானும் ஒரு பித்தனாய் மாறியிருப்பேனோ? நல்லவேளை... நான் ஒரு போராளி அல்ல! நினைவுகள் சடங்காகாமல், வரலாறு மறதியாகாமல், தியாகங்கள் வெறும் வார்த்தைகளாகாமல் இருக்கட்டும்.

• • •

மாவீரர் நாள் 2026 ... தொடர்ச்சி...

என்பது தன்னார்வத் தொண்டு செய்வது, நிகழ்வுகளை ஒருங்கிணைப்பது மற்றும் பிறர் இடும் கட்டளைகளைச் செயல்படுத்துவது மட்டுமே என்று கருதுகிறோம்.

ஆஸ்திரேலியச் சமூகத்தில் வழக்கறிஞர்களாக, மருத்துவர்களாக, பொறியாளர்களாக மற்றும் பல்வேறு தொழில் வல்லுநர்களாகச் செயல்படும் அளவுக்கு நாங்கள் வளர்ந்துவிட்டோம். ஆனால், நமது சொந்த சமூகத்திற்குள் வரும்போது, அர்த்தமுள்ள அரசியல் விவாதங்களில் பங்கேற்க முடியாத அளவுக்கு நாங்கள் இன்னும் 'மிகவும் இளையவர்கள்' என்று கருதப்படுகிறோம்.

நாங்கள் எப்போதுதான் 'தயார்' என்று கருதப்படுவோம்?

முப்பது வயதிலா? நாற்பது வயதிலா? அல்லது ஐம்பது வயதிலா? அல்லது, தற்போது தலைமைப் பொறுப்புகளில் இருப்பவர்கள் அந்தப் பொறுப்புகளை வகிக்க முடியாத நிலை ஏற்படும்போது மட்டும்தானா மாற்றம் நிகழ வேண்டும்?

தலைமை என்பது வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கக்கூடிய ஒரு உரிமையல்ல; அது ஒரு பொறுப்பு. அந்தப் பொறுப்பை மற்றவர்களும் ஏற்கும் வகையில் அவர்களைத் தயார்ப்படுத்துவதும் அந்தப் பொறுப்பின் ஒரு பகுதியாகும். ஒரு நிறுவனம், அதை வழிநடத்தும் தனிநபர் இல்லையென்றால் இயங்க முடியாது என்ற நிலையில் இருந்தால், அந்தத் தனிநபர் ஒரு நீடித்த அமைப்பை உருவாக்கத் தவறிவிட்டார் என்றே அர்த்தம்.

முந்தைய தலைமுறையின் மிகப்பெரிய சாதனை என்பது, தங்களை விட அதிக அறிவு, திறன் மற்றும் அரசியல் விழிப்புணர்வு கொண்ட ஒரு இளைய தலைமுறையை உருவாக்குவதாகவே இருக்க வேண்டும்.

உங்களை விட அதிக அறிவுள்ள இளைஞரைக் கண்டு அஞ்சாதீர்கள். உங்கள் செயல்பாட்டு முறைகளைச் சவால் செய்யும் இளைஞர்களை ஊக்கமிழக்கச் செய்யாதீர்கள். உங்கள் தனிப்பட்ட கருத்து வேறுபாடுகளை அப்படியே ஏற்றுக்கொண்டு பின்பற்ற மறுக்கிறார்கள் என்பதற்காக மட்டும், எந்தவொரு இளைஞரின் குரலையும் ஒடுக்காதீர்கள்.

நாங்கள் பிறப்பதற்கு முன்பே தொடங்கிய நிறுவனங்களுக்கு இடையிலான பகைமைகளைச் சுமக்கும் கட்டாயம் எங்கள் இளைய தலைமுறைக்கு இருக்கக்கூடாது. பல தசாப்தங்களாக நீடிக்கும் தனிப்பட்ட மனக்கசப்புகள், அங்கீகாரத்திற்கான போட்டிகள் மற்றும் நமது சமூகத்திற்குள் ஒத்துழைப்பைக் குலைத்து வந்த கருத்து வேறுபாடுகளை நாங்கள் வாரிசாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள்.

'தமிழ் ஈழம்' என்பது உங்கள் பதவியை விடவும், உங்கள் அமைப்பை விடவும், உங்கள் தனிப்பட்ட நற்பெயரை விடவும் மேலானது.

ஈழத் தமிழ் இளைய தலைமுறையினரே, நம் மீதும் சமமான, பெரும் பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை நாம் உணர வேண்டும்.

முந்தைய தலைமுறையை விமர்சிப்பதிலேயே நம் வாழ்நாளைக் கழித்துவிட்டு, அதே வேளையில் நம்மை நாமே அறிவூட்டிக்கொள்ளத் தவறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. நம் வரலாறு முக்கியமானது என்று வாதிடும் அதே வேளையில், அதை முறையாகக் கற்க எந்த முயற்சியும் எடுக்காமல் இருக்கக்கூடாது. ஈழத் தமிழர்களின் அரசியல் வரலாற்றை நாமே விளக்குவதற்குத் திணறும் நிலையில், சர்வதேச சமூகம் அதை எப்படிப் புரிந்துகொள்ளும் என்று எதிர்பார்க்க முடியும்?

இன்றைய காலகட்டத்தில் அறிவு என்பது முன்னெப்போதையும் விட எளிதாகக் கிடைக்கிறது. பல்கலைக்கழகங்கள், சர்வதேச அமைப்புகள், சட்ட அமைப்புகள், நாடாளுமன்றங்கள் மற்றும் இராஜதந்திர தளங்கள் என அனைத்தும் நமக்கு அணுகக்கூடிய நிலையில் உள்ளன. முந்தைய தலைமுறையினருக்குக் கிடைக்காத பல வாய்ப்புகள் இன்று நமக்குக் கிடைத்துள்ளன.

இவற்றைப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்தும் உறுதி நம்மிடம் இருக்கிறதா என்பதே கேள்வி.

சர்வதேசச் சட்டம், சர்வதேச உறவுகள், அரசியல் வரலாறு, இராஜதந்திரம் மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து நம் தலைமுறை புரிந்துகொள்ள வேண்டும். ஆதாரங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றன, வரலாற்றுச் சித்தரிப்புகள் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றன, அரசியல் முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நீதிமன்றம், நாடாளுமன்றம், பல்கலைக்கழகம் அல்லது ஏதேனும் ஒரு சர்வதேச அமைப்பிற்குள் நுழைந்து, ஈழத் தமிழர்களின் அனுபவங்களை அறிவுசார் தன்னம்பிக்கையுடனும், வரலாற்று அறிவோடும், அரசியல் தெளிவோடும் எடுத்துரைக்கும் திறன் நமக்கு இருக்க வேண்டும்.

வெறும் உணர்ச்சிகளால் சட்டரீதியான பொறுப்புக்கூறலை நிலைநாட்ட முடியாது. கோபத்தால் மட்டும் நிறுவனங்களைக் கட்டியெழுப்ப முடியாது. சமூக ஊடகப் பதிவுகள், பல ஆண்டுகால ஆய்வு, கல்வி மற்றும் தொடர்ச்சியான அரசியல் ஈடுபாட்டிற்கு மாற்றாக அமைய முடியாது.

அர்த்தமுள்ள முன்னெடுப்புகளுக்குத் தேவையான கடினமான பணிகளைச் செய்ய நம் தலைமுறை தயாராக இருக்க வேண்டும்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு, அரசியலில் தீவிரமாகச் செயல்படுபவர்களுக்கு மட்டுமே உரியது அல்ல என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நம் மொழியைக் காக்கும் தமிழ் ஆசிரியர், வரலாற்றைப் பதிவு செய்யும் ஆய்வாளர், பொறுப்புக்கூறலுக்காகப் பணியாற்றும் வழக்கறிஞர், மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் ஒவ்வொரு தனிமனிதனும் நம் சமூகத்தின் தொடர்ச்சியை உறுதி செய்கிறார்கள்.

நாம் ஆஸ்திரேலியாவில் இருக்கும் வேளையில், ஈழத்தில் தாய்மார்கள் இன்னும் காணாமல் போன தங்கள் பிள்ளைகளைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் பல ஆண்டுகளாக விடைகளுக்காகக் காத்திருக்கிறார்கள்; அந்த விடைகள் அவர்களின் வாழ்நாளில் கிடைக்குமா என்பது கூடத் தெரியவில்லை. நில அபகரிப்பு, இராணுவமயமாக்கல் மற்றும் நினைவுகூரும் உரிமையின் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அக்குடும்பங்கள் தொடர்ந்து கவலைகளை எழுப்பி வருகின்றன.

அவர்களின் துயரம் அன்றாட யதார்த்தமாக இருக்கும்போது, அவர்களுக்கான நம் கடமையை வெறும் ஆண்டுதோறும் கடைப்பிடிக்கும் ஒரு சடங்காக மட்டும் எப்படி மாற்ற முடியும்?

ஈழத் தமிழர்களாகிய நமக்குள்ள பொறுப்புகளை நினைவுகூரும் நாளாக, நவம்பர் 27-ஆம் தேதியை மட்டும் நாம் சுருக்கிவிடக்கூடாது.

அதேபோல், 'மாவீரர் நாள்' நிகழ்வின் புனிதத் தன்மையையும் நாம் பாதுகாக்க வேண்டும். இது ஏதோ ஒரு கொண்டாட்டமோ அல்லது திருவிழாவோ அல்ல. இது பொழுதுபோக்கிற்கானதோ, அமைப்பின் விளம்பரத்திற்கோ அல்லது தனிப்பட்ட அங்கீகாரத்தைப் பெறுவதற்கோ உரிய தருணமல்ல. இது, நம்மில் பலரால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத நினைவுகளைக் குடும்பங்கள் எதிர்கொள்ளும் ஒரு நாளாகும்.

ஒரு தாய் தனது பிள்ளையின் புகைப்படத்திற்கு முன்னால் நிற்கும்போது, அவளது துயரத்தை மதிப்பதுதான் நமது முதல் கடமையாகும்.

நாம் ஏன் இந்தச் சுடரை ஏற்றுகிறோம் என்று ஒரு இளைஞர் அல்லது இளம்பெண் கேட்கும்போது, அவர்களுக்கு விளக்கம் அளிப்பது நமது பொறுப்பாகும்.

வரலாற்றுச் சான்றுகள் மறைந்துபோகும் அபாயம் ஏற்படும்போது, அவற்றைப் பாதுகாப்பது நமது பொறுப்பாகும்.

சர்வதேச விவாதங்களில் நமது மக்களின் குரல்கள் புறக்கணிக்கப்படும்போது, அமைதியான, கொள்கை சார்ந்த மற்றும் தொடர்ச்சியான முன்னெடுப்புகள் மூலம் அவர்களின் அனுபவங்கள் உலகிற்குச் சென்றடைவதை உறுதி செய்வது நமது பொறுப்பாகும்.

தமிழ் ஈழத்தின் அரசியல் வரலாற்றைக் நேரில் கண்ட தலைமுறை, ஒரு கட்டத்தில் நம்முடன் இருக்காது. 2009-ஆம் ஆண்டின் நிகழ்வுகளை நேரில் கண்ட கடைசிச் சாட்சிகளும் ஒரு கட்டத்தில் பேச முடியாத நிலையை அடைவார்கள். இன்று இங்கே நிற்கும் குழந்தைகள், இன்னும் பிறக்காத அடுத்த தலைமுறைக்கு இந்த வரலாற்றை எடுத்துரைக்கும் பொறுப்பைப் பெறும் காலம் வரும்.

அவர்கள் நம்மிடமிருந்து எதைப் பெற்றுக்கொள்வார்கள்?

அவர்கள், முறையாகச் செயல்படும் அமைப்புகள், ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு, அரசியல் அறிவு மற்றும் வலுவான கலாச்சார அடையாளம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வார்களா? அல்லது, விளக்கங்கள் இல்லாத புகைப்படங்கள், புரிதல் இல்லாத நினைவேந்தல்கள், மற்றும் தொடக்கமே நினைவில் இல்லாத கருத்து வேறுபாடுகளால் பிளவுபட்ட அமைப்புகளைத்தான் அவர்கள் பெற்றுக்கொள்வார்களா?

இந்தக் கேள்விதான் இன்று நம் ஒவ்வொருவர் முன்னாலும் எழ வேண்டும்.

ஏனெனில், வரலாற்று நினைவுகளை அழிப்பது என்பது எப்போதும் நினைவுச்சின்னங்களையோ அல்லது ஆவணங்களையோ அழிப்பதன் மூலம் மட்டுமே நடப்பதில்லை. சில சமயங்களில், ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு அறிவைப் புகட்டத் தவறுவதன் மூலமும் அது நிகழ்கிறது. அத்தகைய நிலை நமது வரலாறாக மாறிவிட நாம் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

இன்று நாம் ஏற்றும் இந்தச் சுடர், ஒரு குறிப்பிட்ட நபரின் வாழ்நாளையோ, ஒரு குறிப்பிட்ட அமைப்பின் இருப்பையோ அல்லது ஒரு குறிப்பிட்ட தலைமுறையையோ சார்ந்திருக்கக் கூடாது.

இது நம் அனைவரையும் கடந்து நிலைத்திருக்க வேண்டும்.

முந்தைய தலைமுறையினர், அறிவு, நேர்மை மற்றும் வழிகாட்டுதல் மூலம் இந்தச் சுடரை அடுத்த தலைமுறைக்குக் கையளிக்க வேண்டும். இளைய தலைமுறையினர், உறுதி, கல்வி, ஒழுக்கம், கலாச்சார கண்ணியம் மற்றும் மனித நேயத்தின் மீதான மரியாதை ஆகியவற்றைக் கொண்டு இந்தச் சுடரைத் தொடர்ந்து ஏந்திச் செல்ல வேண்டும்.

பதினேழு ஆண்டுகள் கடந்துவிட்டன; ஆனால், இந்த பதினேழு ஆண்டுகள் மறதியின் தொடக்கமாக மாறி விடக்கூடாது.

இன்னும் பதினேழு ஆண்டுகள் கடந்து செல்லட்டும். ஐம்பது ஆண்டுகள் கடந்து செல்லட்டும். ஒரு நூற்றாண்டு கடந்து செல்லட்டும். நம் பிள்ளைகளும், அவர்களின் பிள்ளைகளும் தமிழ் ஈழத்தின் வரலாற்றை அறிந்திருக்க வேண்டும்; தங்கள் மக்களின் அனுபவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்; உண்மை, நீதி மற்றும் கண்ணியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள வேண்டும்.

நம் மூத்தவர்கள் மறைந்தாலும் இந்தச் சுடர் அணையாது. நம் தலைமுறை முதிர்ச்சியடைந்தாலும் இது அணையாது. 2009-ஆம் ஆண்டின் நிகழ்வுகளைக் கண்ட சாட்சிகளில் கடைசி நபர் மறைந்தாலும், இந்தச் சுடர் அணையாது.

ஏனெனில், அவர்களின் சாட்சியங்களை நாம் பாதுகாத்து வைத்திருப்போம். நம் பிள்ளைகளுக்கு நாம் கற்பித்திருப்போம். நம் கூட்டு நினைவுகளைப் பாதுகாக்கும் நிறுவனங்களை நாம் உருவாக்கியிருப்போம். நம் மக்களின் வரலாறு, நம் வாழ்நாளுக்கு அப்பாலும் உயிர்ப்புடன் இருப்பதை நாம் உறுதி செய்திருப்போம்.

தனிப்பட்ட லட்சியங்களை விட நேர்மை மேலோங்கி இருக்கட்டும். உட்பூசல்களை விட உறுதிப்பாடு வலிமையாக இருக்கட்டும். நம் கலாச்சாரத்தின் மீதான மரியாதை நம் செயல்களில் வெளிப்படட்டும். தனிப்பட்ட அங்கீகாரத்திற்கான விருப்பத்தை விட, வருங்கால சந்ததியினருக்கான பொறுப்புணர்வு பெரிதாக இருக்கட்டும்.

வரலாறு மறைந்துபோக அனுமதித்த தலைமுறையாக நாம் ஒருபோதும் மாறிவிடக் கூடாது. வரலாறு ஒருபோதும் மறக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்த தலைமுறையாக நாம் மாற வேண்டும்.

நினைவுச் சுடர் என்பது ஒரு தலைமுறைக்கு மட்டும் உரியதல்ல; அது இனி வரப்போகும் ஒவ்வொரு தலைமுறைக்கும் உரியது. அந்தச் சுடர் ஒருபோதும் அணையாது.

• • •

போர் மட்டுமே ... தொடர்ச்சி...

கைநோக்கியேஅமைந்துள்ளன. ஏனெனில், ஈரானின் பெரும்பாலான எண்ணெய் சீனாவிற்குச் சென்றுள்ளது. இந்த மறைமுக வர்த்தகம் வற்றிப்போக வேண்டும் என்று வாஷிங்டன் விரும்பினால், அது பெய்ஜிங்கில்தான் தனது பிடியை இறுக்க வேண்டும்.

ட்ரம்பின் தொடர்ச்சியான வரி விதிப்புகள், அமெரிக்கத் தொழில்துறையின் போட்டித்தன்மையை மீட்டெடுப்பதற்கான எந்தவொரு உண்மையான திட்டமும் இல்லாததை உறுதிப்படுத்தியுள்ளன. மாறாக, அமெரிக்கச் சந்தையை விற்றுவிடுவதே தேர்ந்தெடுக்கப்பட்ட பாதையாக உள்ளது.

அமெரிக்கத் தொழில்துறைக்குத் தேவையான விநியோகச் சங்கிலியை உருவாக்கும் நாடுகளில், உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தியில் பெரும் முதலீடுகளை மீண்டும் தொடங்குவதில்தான் உண்மையான தீர்வு உள்ளது. வரிகள் பணவீக்கத்தை உருவாக்குவது மட்டுமல்ல; பல சந்தர்ப்பங்களில் அவை இடைவெளியையும் வெளிப்படுத்துகின்றன.

அதேசமயம், ஈரானும் ட்ரம்ப் மீதான அழுத்தத்தை அதிகரிக்கிறது. ஹோர்முஸ் முற்றுகை மற்றும் ஈரானியத் தாக்குதல்களால் நிலைகுலைந்த முதல் வளைகுடாப் பொருளாதாரம் பஹ்ரைன் ஆகும்.

ஐக்கிய அரபு அமீரகத்திடமிருந்து சுமார் 5.5 பில்லியன் டாலர் மதிப்பிலான நாணயப் பரிமாற்றம் உட்படக் கணிசமான ஆதரவைப் பெற்ற பிறகும், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கணிப்பின்படி, 2026-ஆம் ஆண்டில் அந்நாடு 11.3% சுருங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அதன் பொதுக் கடன் ஏற்கனவே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 163%-ஐ நெருங்குகிறது. அந்நியச் செலாவணிக் கையிருப்பும் கடுமையாகச் சரிந்துள்ளது.

ஈரான் பஹ்ரைனை மட்டும் குறிவைக்கவில்லை. ஹோர்முஸ் முற்றுகைப் புள்ளி வழியாகத் தொடர்ச்சியான அழுத்தம் கொடுப்பதும், தாக்குதல்களை நடத்துவதும் போன்ற அதே தந்திரம், முழு வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில் (GCC) நாடுகளையும் குறிவைக்கிறது.

இந்த நீர்வழிப்பாதையை முழுமையாகச் சார்ந்திருக்கும் நாடுகளானகத்தார், குவைத் மற்றும் பஹ்ரைன் ஆகியவை மிகக் கடுமையான பாதிப்பை எதிர்கொள்கின்றன. அனைத்து நாடுகளிலும் இரட்டை இலக்கச் சுருக்கங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் கூட, பகுதி மாற்றுப்பாதை வசதிகள் இருந்த போதிலும் பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றன.

இதன் நோக்கம் ஒன்றே. வளைகுடா முடியாட்சிகள் ட்ரம்பைப் பணிய வைக்கும் வரை, அவற்றின் மீது பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான அழுத்தத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.

இருப்பினும், பதற்றத்தை மேலும் தீவிரப்படுத்தினால் மட்டுமே அந்த விளைவை ஏற்படுத்த முடியும் என்று ஈரானியத் தலைமையின் ஒரு பிரிவு வாதிடுகிறது. எனவே, இரு தரப்புக்கும் போர் தான் தற்போதைய தெரிவாக உள்ளது.

• • •

மாவீரர்கள்: மனிதகுல... தொடர்ச்சி...

மேலும் பிரான்ஸ் மற்றும் அமெரிக்கர்களுக்கெதி ராக சுதந்திரம் பெறுவதற்குப் போராடிய வியட்கொங் படையின் தலைவர் ஹோ-சி-மின் இறந்த நாளான 03.09.1969 ஆம் ஆண்டை வியட்நாமின் தேசிய வீரர்கள் தினமாக கொண்டாடி வருகின்றனர்.

இவர்கள் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடு களுடனான விடுதலைப் போரில் கொடுத்த விலைகளும் உயிரிழப்புக்களும் சொல்லொணாத்துயர்களும் எண் ணிலடங்காதவை. இந்தியா கூட தனது சுதந்திர நாளில் விடுதலைக்காக உயிரிழந்த வீரர்களை நினைவு கூருகின்றது. அதேபோல் ஜேர்மனியும் உலகப் போரில் இறந்த வீரர்களை தவறாது கௌரவித்து நினைவு கூருவது குறிப்பிடத்தக்கது.

சுதந்திர தமிழீழ விடுதலையை அடிநாதமாகக் கொண்டு அதற்கான விடுதலைப் போரை முன்னிறுத்தி போரிலே தங்களுயிர்களை தாரைவார்த்து தமிழர் மானம் காத்த மாவீரர் நாளை வர்ணிக்க மனித மொழிகளில் வார்த்தையில்லை. ஏரிநட்சத்திரங்களாக விடுதலையின் விடிவெள்ளிகளாக எரிந்து எமது விடுதலை வானை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சுதந்திரச்சிற்பிகளை நினைவுகூரும் நாள் நவம்பர் 27.

ஈடிணையற்ற ஈகங்கள் புரிந்து அளப்பரிய அற்புதங்கள் செய்து மயிர்கூச் செறியும் சாதனைகள் செய்து எமது விடுதலைப் போராட்டத்தைப் பூமிப்பந்தெங்கும் விளங்கச் செய்த இந்த வீரமாவீரர்களின் வீரத் திருநாள் நவம்பர் 27.

சங்ககாலத்திற்கு முன்பிருந்தே போரில் வீழ்ந்த வீரர்களை நினைவு கூருதல் இருந்து வருகின்றது. போரில் மாண்ட வீரர்களை புதைத்து அவர்களின் ஞாபகார்த்தமாக நடுகற்களை இட்டு வணங்குகின்ற நடுகல் வணக்கமுறை காணப்பட்டு வந்திருக்கிறது. எனவே போரில் இறந்த வீரர்களை வணங்குகின்ற முறை தமிழர் பண்பாடாகும். தமிழில் ஆரியம் கலப்பதற்கு முன் இறந்தவர்களை புதைக்கின்ற முறையே இருந்தது. தமிழில் ஆரியம் வந்து கலந்துவிட்டதன் பின் இறந்தவர்களை எரித்தார்கள். இது ஆரியமும், பிராமணியமும் எம்முள் புகுத்திய கலாச்சாரங்கள். போரில் இறந்தவர்களை வீரசுவர்க்கம் அடைந்தவர்கள் என மரியாதை செய்து நடுகல் நாட்டி வணங்கிய வரலாற்றை புறநானூற்றில் பரவலாகக் காண்கின்றோம். அது பிற்காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமைக்கு இலக் கியங்கள் சான்று பகர்கின்றன. திருக்குறளிலும் போரில் இறந்த வீரர்களுக்கு கல்லறை அமைத்து வழிபடுதல் பற்றிக் கூறப்படுகிறது.

அந்த வகையில் மீண்டும் ஒரு புறநானூற்றுத் தமிழனாக தன்னுடைய விடுதலைக்காக போராடி வீழ்ந்த வீரர்களை கல்லறைகளில் இட்டு அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு சில தினங்களை மாவீரர் வாரமாக கொண்டாடுகின்ற மரபு விடுதலைப் புலிகளைத் தவிர வேறு எந்த விடுதலை அமைப்புக்களுக்கோ அரசுகளுக்கோ இல்லாத தனிச்சிறப்பாகும். உலகிலே எங்கும் இடம்பெறாத வகையில் இந்த வீரக்குழந்தைகளுக்கு வீரத்தாலாட்டு ஈழத்தமிழ் மண்ணிலே சிறப்பாக இடம்பெற்றது.

இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீனப் போரியல் மேதையான சன்சூ அவர்களால் எழுதப் பட்டதாகக் கூறப்படும் “The Art of War” என்னும் நூலில் எவனொருவன் போரில் இறந்த வீரர்களுக்கு மரியாதை செய்து கௌரவப்படுத்துகிறானோ அவனே சிறந்த வீரன் என்றும், போரில் மாண்ட வீரர்களின் கனவை நனவாக மாற்றுகின்ற படைத்தலைவன் தன்னிகரில்லாத் தலைவன் ஆகின்றான் என்றும் சன்சூ கூறியது கவனத்திற்குரியது.

தமிழீழ விடுதலைப் போரில் வீழ்ந்த முதல் வித்தான லெப்.சங்கரின் இறந்த நாளான நவம்பர் 27 ஐ மாவீரர் நாளாக 1989 ஆம் ஆண்டு தேசியத் தலைவரால் அறிவிக்கப்பட்டு உணர்வுபூர்வமாக இன்றுவரை கடைப்பிடிக்கப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு 1307 மாவீரர்கள் மணலாறு மாவட்டத்தில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிக்குள்ளும் நள்ளிரவு 12.01 மணிக்கு தீபங்கள் ஏற்றி மலர் தூவி நினைவு கூரப்பட்டனர்.

1990 ஆம் ஆண்டு லெப்.சங்கர் இறந்த நாளான நவம்பர் 27 ஐ இறுதி நாளாகக் கொண்டு 21 முதல் 27 வரையான ஒரு வாரத்தினை மாவீரர் வாரமாக அறிவிக்கப்பட்டு கொண் டாடப்பட்டுவந்தது.

அத்துடன் 1977 ஆம் ஆண்டுமுதல் விடுதலைப்புலிக ளின் கொடியாக இருந்துவந்த புலிக்கொடியில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழீழத்தின் தேசியக் கொடியாக 27.11.1990 அறிவிக்கப்பட்டது. அன்றுமுதல் புலிகளின் கொடியில் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற எழுத்தும், தமிழீழ தேசியக் கொடியில் எழுத்தற்ற புலிக்கொடியும் நடைமுறைக்கு வந்தது.

1991 ஆண்டுக்கு முன்னர் மாவீரர்களைப் புதைக் கும் வழக்கம் இருக்கவில்லை. வீரச்சாவடைகின்ற போராளி களின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் புதைக்கப்பட்டோ அல்லது எரிக்கப்பட்டோ அவர்களது இறுதிக் கிரியைகள் நடந்தன. மாறாக காடுகளுக்குள் இறக்கும் மாவீரர்கள் மாத்திரம் விதைக்கப்பட்டனர்.

ஆனால் 1991 இலிருந்து வீரமரணமடைகின்ற மாவீரர்களின் உடல்கள் சாத்திர சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் கடந்து இனிமேல் எரிக்கப்படாது. விதைகுழிகளில் புதைக்கப்படும்.

அவ்வாறு விதைக்கப்பட்ட மாவீரர்களின் இடத்தில் கல்லறைகள் எழுப்பப்பட்டு அதில் அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டு பொக்கிசங்களாக எமது மண்ணில் பொருள் வடிவில் எமது தேசிய நினைவுச் சின்னங்களாக இருந்து காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டேயிருக்கவேண்டும். என்பதற்காக கல்லறைகளை அமைக்க நாம் முடிவெடுத்தோம் என விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

அந்தவகையில் 1991 ஆண்டு தொடக்கம் வீரமரண மடைகின்ற மாவீரர்களது உடல்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட துயிலுமில்லங்களில் விதைக்கப்பட்டனர். அந்த ஆண்டு (1991) 3750 ற்கும் மேற்பட்ட மாவீரர்கள் நினைவுகூரப்பட்டனர்.

அதே வருடம் (1991) இடம் பெற்ற மாவீரர் நாளில் புதுவை இரத்தினதுரையின் கவிதை வரிகளை இசைவாணர் கண்ணன் கானமாக மீட்ட வர்ண இராமேஸ்வரனின் குரலில் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் மாவீரர் துயிலும் இல்லப் பாடல் முதன் முதலில் ஒலிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டு மாவீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பின் 1995ஆம் ஆண்டிலிருந்து 25 ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை மாவீரர் தினம் அனுட்டிக் கப்படுவதுதோடு முதல் மாவீரர் லெப்.சங்கர் வீரச்சாவடைந்த நேரமான மாலை 06.05 இற்கு சூரியன் மறையும் நேரம் இந்தச் சூரியர்களுக்கு தீபங்கள் ஏற்றி வணங்குவது குறிப்பிடத்தக்கது.

1998 ஆம் ஆண்டு 14.435 மாவீரர்களுக்கு நினைவு கூரப்பட்டது. 2007 ஆம் ஆண்டு 19.887 மாவீரர்களுக்கும், 2008 ஆம் ஆண்டு 24.600 ற்கும் மேற்பட்ட மாவீரர்களுக்கும், முள்ளிவாய்க்கால் போருக்குப் பின் இந்த வருடம் கிட்டத்தட்ட 6,000 மாவீரர்களுக்கும் தமிழீழ மண் கண்ணீரால் இவர்கள் பாதங்கள் நனைத்து அஞ்சலிக்க.

உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழினம் வருடம்தோறும் இம்மாவீரர்களை மௌனமாக வணங்குகி றது. தமது வாயிலிருந்து விடுதலைப் போர் பற்றிய எதுவித உண்மைகளும், தெரியவரக்கூடாது என்பதற்காக தனது நாக்கை வெட்டி மாவீரனான கப்டன் பாலன்.

சயனைட் உண்டு வீரகாவியமான மூத்த தளபதிகளான குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான வீரர்கள்.

தம்முயிர்களைத் துச்சமென மதித்து உடலையே கந்தகமாக்கி வெடித்து உயிர் நீத்த மில்லர் உட்பட்ட கரும்புலிகள். எதிரியிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக தம்மைத்தாமே அழித்த கேணல் கிட்டு போன்ற மாவீரர்கள்.

தன்னுடலை மெழுகுதிரியாக்கி உயிர்நீத்த திலீபன், பூபதி, என எண்ணற்ற வீரர்கள். கொய்சிமினின் இறப்புக்கு பின் வியட்நாமின் வியட்கொங் படைகளை வழிநடத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட வியட்நாமிய ஜெனரல் வோ நியூ கியன் ஜியாப் போல் தமிழர் படைகளை 25 ஆண்டுகளுக்கு மேல் வழிநடத்தி ஒவ்வொரு தாக்குதல்களையும் தலைமை ஏற்று விடுதலைப் போரை ஒரு மரபுவழிப்படையணியாக மாற்றி தேசியத் தலைவருக்கு பக்கபலமாக இருந்த படைத்தளபதிகளான பிரிகேடியர்கள் பால்ராஜ், தீபன், ஜெயம், சொர்ணம், சூசை, சசிகுமார் மாஸ்ரர், மணிவண்ணன், பானு, தமிழ்ச்செல்வன், துர்க்கா, விதுஷா, என தமிழீழத்தாய் பிரசவித்த வீரத்தின் சிகரங்கள் அனைவரும் கார்த்திகைப்பூ போலவே வித்தியாசமான தன்மைகளைக் கொண்டவர்களே.

பொதுவாக விடுதலைக்காகப் போராடிய, போராடிக் கொண்டிருக்கின்ற அமைப்புக்கள் மற்றும் அரசுகளே போரில் இறந்த வீரர்களை ஆண்டு தோறும் நினைவு கூருகின்றனர்.

மாறாக ஏகாதிபத்தியத்தின் மூலம் நாடுகளை ஆக்கிரமித்த அமெரிக்க அரசு இறந்த வீரர்களை நினைவு கூருவதை பொதுவாகக் காணமுடிவதில்லை.

ஆனால் வியட்நாம் போரில் கொல்லப்பட்ட 58132 அமெரிக்க வீரர்களுக்கு ஜோன் ஸ்ரக்ஸ் என்பவரின் தலைமையில் வியட்நாம் வீரர்கள் நினைவு நிதி என்ற பெயரில் நிதி திரட்டப்பட்டு வோஷிங்டனில் ஆபிரகாம் லிங்கன் நினைவுச் சின்னத்திற்கருகில் 75 மீ உயரமான இரண்டு சுவர்களுடன் கூடிய கல்லறை அமைக்கப்பட்டு அதில் வியட்நாமில் இறந்த 58132 அமெரிக்க வீரர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டன.

இந்நினைவு சின்னம் 1982 நவம்பரிலேயே திறந்து வைக்கப்பட்டது. ஆனால் ஈழத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக் குள் தமிழீழ தேசம் விழுங்கப்பட்டதனால் அங்கு உள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் யாவும் அழிக்கப்பட்டுள்ளன.

உலகப் பொதுவழக்கங்களுக்கும், இராணுவ விழுமி யங்களுக்கும் மாறாக சிங்களப் பேரினவாத அரசின் இந்தக் கல்லறைகளை இடிப்பு மனித நாகரிக விழுமியங்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அவமானம்.

இந்தப் பின்னணியிலேயே உலக அரங்கில் ஈழத்தமிழினத்தின் குறியீடாக கார்த்திகைப்பூ மிளிர்ந்து நிற்கிறது. அது கமழும் தேசிய வாசத்தை நுகர்வதற்கு பேரினவாதம் தயாராக இல்லை.

பௌத்த பண்பாட்டு விழுமிய மலரான நீலோற் பலம் தான் இலங்கைத்தீவின் ஒரே ஒரு பூ என அதன் நாசி வழிகள் எங்கும் நீலோற்பலத்தால் அடைத்து வைத்திருக்கிறது.

இந்த ஈனச் செயலுக்கு சிங்களதேசம் என்றோ ஒரு நாள் பதில்சொல்லியே ஆகவேண்டும்.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒவ் வொரு மாவீரனுக்கும் தனித்தனிக் கல்லறை அமைத்து அவர்களுக்காக விசேடமாக தனித்தனித் தீபங்கள் ஏற்றப்படுவதோடு மாவீரர்கள் பெற்றோரும் கௌரவிக்கப்படு கின்றமை எந்த ஒரு நாட்டிலும் இல்லாத தனிச்சிறப்பாகும்.

2016 ஆம் ஆண்டின் ஒவ்வொரு துயிலும் இல்லங்களிலும் 2009 இற்குப் பின்னர் தீபங்கள் ஏற்றப்பட்டன. இன்று, 2026 தமிழீழமெங்கும் சிறப்பாக கல்லறைகள் இல்லாவிட்டாலும் சிறப்பாக உணர்வெழுச்சியுடன் மாவீரர் நாள் அனுட்டிக்கப்படுகிறது. அழித்தொழிக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களில் இன்று மக்கள் சென்று தீபமேற்றக் கூடிய நிலையுள்ளது.

எனினும் ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் தனிக் கல்லறைகளில் தீபங்கள் ஏற்ற முடியாதுதான். ஆனாலும் உங்களுக்காக தமிழீழ மக்கள் யாவரினதும் இதயங்களிலும் தீபங்கள் எரியும். நாளை தேசம் மீளும் போது உங்கள் கல்லறைகளில் நிச்சயம் கார்த்திகை தீபங்கள் எரியும்.

இவ்வாறு வரலாற்றின் முதுகெலும்பாக அமையும் மாவீரர்களின் தியாகம் உலகெங்கும் பல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய் போற்றப்பட்டுவரும் வரிசையில் ஈழத் தமிழர்களின் விடிவுக்காக தியாகிகளான மாவீரர்களும் உலக வரலாற்றுச் சங்கிலியின் ஒரு மதிப்புக்குரிய கண்ணியாவர்.

• • •

குத்தகை ஒப்பந்தம் 2042... தொடர்ச்சி...

சுடன் பெருந்தோட்ட அமைச்சையும் இணைத்துப் புதிய பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

6.தேயிலைச் செய்கையைத் தவிர்த்து, சுற்றுலா விடுதிகள் போன்ற வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் காணி களுக்கு அதிக குத்தகைத் தொகையை அறவிட வேண்டும்.

எவ்வாறாயினும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், பெருந்தோட்டக் காணிக் குத்தகை ஒப்பந்தத்தை நீட்டிக்கும் ஜனாதிபதியின் தீர்மானத்தை முற்றாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளார்.

மலையக மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்த வேண்டிய வரலாற்றுத் தருணத்தில், மீண்டும் கம்பனிகளுக்குக் காணிகளைத் தாரைவார்ப்பது மக்களுக்கு இழைக்கும் துரோகம் என்று அவர் விமர்சித்துள்ளார்.

200 ரூபா சம்பள அதிகரிப்புக்கும் குத்தகை நீட்டிப்புக்கும் இடையில் ஏதேனும் இரகசிய இணக்கப்பாடு உள்ளதா என்ற சந்தேகத்தை எழுப்பியுள்ள அவர், வரவு செலவுத் திட்டத்தில் வீடமைப்புக்கான உள்நாட்டு நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் உரிமைகளைப் புறக்கணித்து இவ் வாறான குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், எதிர்கா லத்தில் தாம் ஆட்சிக்கு வரும்போது அதனைக் கிழித் தெறிவோம் என்று அவர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரமும் தேயிலைத் தொழிலும் செழிக்க வேண்டும் என்பதில் மலையக மக்களுக்கும் அவர்களின் பிரதிநிதிகளுக்கும் மாற்றுக் கருத்தில்லை.

ஆனால், “மண்ணை நம்பி வாழும் மக்களுக்கு அந்த மண்ணில் உரிமையில்லை” என்ற அவல நிலை தொடர்வதையே மலையக மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் எதிர்க்கின்றனர்.

குடியிருப்புப் பகுதிகளைத் தோட்ட நிர்வாகத்தின் பிடியிலிருந்து விடுவித்து, நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போன்று கிராம சேவகர் மற்றும் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதும், ஒவ்வொரு குடும் பத்திற்கும் கௌரவமாக வாழக்கூடிய அளவிலான காணி உரிமையை வழங்குவதுமே மலையக மக்களின் அடிப்படைத் தேவையாகும்.

2042ஆம் ஆண்டுக்கான பெருந்தோட்டக் குத்தகை ஒப்பந்தம் என்பது வெறுமனே நிலத்திற்கும் கம்பனிகளுக் கும் இடையிலான வணிக ஒப்பந்தம் மட்டுமல்ல. அது இலட்சக்கணக்கான மலையக மக்களின் வாழ்வாதாரம், சுயமரியாதை மற்றும் எதிர்காலச் சந்ததியினரின் தலை விதியைத் தீர்மானிக்கப்போகும் வரலாற்று ஆவணமாகும்.

ஜனாதிபதி குறிப்பிடுவது போன்று, “மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய நிபந்தனைகள்” வெறும் ஏட்டளவில் நின்றுவிடாமல், மலையகத் தலைவர்கள் முன்வைத்துள்ள காணி உரிமை, குடியிருப்புகளைப் பிரதேச செயலகத்தின் கீழ் கொண்டுவருதல், தரிசு நிலங்களை இளைஞர்களுக்குப் பகிர்ந்தளித்தல் மற்றும் நியாயமான சம்பள நிர்ணயம் ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

கம்பனிகளின் இலாபத்தைவிட மனித மாண்புக் கும் மக்களின் உரிமைக்கும் முன்னுரிமை அளித்து உரு வாக்கப்படும் ஒப்பந்தமே, மலையக மண்ணில் உண்மையான சமூக நீதியையும் நாட்டின் பொருளாதாரத்தில் நிலையான சுபீட்சத்தையும் ஏற்படுத்தும்.

• • •

தமிழர் தாயகத்தில் ... தொடர்ச்சி...

மாலை 6.05 மணிக்கு மணியோசை எழுப்பப்பட்டு, அக வணக்கம் செலுத்தப்பட்ட பின்னர் பொதுச் சுடரும் ஏனைய நினைவுச் சுடர்களும் ஏற்றப்பட்டு, உயிர்நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, மாவீரர் நாளை முன்னிட்டு, மறைந்த எம்.கே. சிவாஜிலிங்கம் அஞ்சலி செலுத்திய இடங்களிலும் நேற்று (27) நினைவேந்தல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்தவகையில், மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்று (27), மறைந்த தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கத்தின் வழியில் கம்பர்மலையில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

கம்பர்மலையில், தமிழீழ விடுதலைப் போராட்டத் தின் முதல் மாவீரர் சங்கரின் வீடு அமைந்திருந்த இடத்திற்கு முன்பாக ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, கேப்டன் பண்டிதரின் தாயார் ஈகைச் சுடரை ஏற்றி வைத்ததைத் தொடர்ந்து, நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து, கேப்டன் பண்டிதரின் இல்லத்திற்குச் சென்ற அவர்கள், அவரது உருவப்படத்திற்கு முன்பாகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது, அவரது குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் மலரஞ்சலி செலுத்தி நினைவுகூர்ந்தனர்.

இந்திய – இலங்கை... தொடர்ச்சி...

விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பு குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், இலங்கையின் வெளி நாட்டலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத்தைச் சந்தித் தது மகிழ்ச்சியளிப்பதாகவும், இருதரப்பு உறவுகள் மற்றும் பிராந்திய நிலைமைகள் குறித்து பயனுள்ள கலந்து ரையாடல்களை முன்னெடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் இந்து சமுத்திர விளிம்பு நாடுகளின் சங்க மாநாட்டில் மேலதிகக் கலந்துரையாடல் களை முன்னெடுக்கத் தாம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தியாவின் 'அயலுறவுக்கு முதலிடம்' கொள்கை மற்றும் 'மகாசாகர் தொலைநோக்கு' ஆகிய முன்னெடுப்புகளின் முக்கியத்துவத்தையும் இந்திய வெளிவிவகார அமைச்சர் தனது பதிவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தியாவின் 'கரப்பான் பூச்சி' ... தொடர்ச்சி...

பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட முதல் பின்னடைவாகும்; இந்த நிகழ்வுக்குப் பிறகு, இந்த இயக்கம் அரசியல் முக்கியத்துவம் பெற்றது.

தேர்தல் வாக்காளர் பட்டியலில் நாடு தழுவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களால், தற்காலிக வாக்காளர் பட்டியலிலிருந்து சுமார் 130 மில்லியன் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் கியான்ஷே குமார் பதவி விலக வேண்டும் என்று கோரி, CJP தனது அரசியல் போராட்டத்தைத் தொடர்ந்து வருகிறது. அதேசமயம், இந்த நடவடிக்கை நகல் மற்றும் தகுதியற்ற பதிவுகளை நீக்குவதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாகத் தேர்தல் ஆணையம் விளக்கம் அளித்துள்ளது.

மும்பையில், CJP அமைப்பின் நிறுவனர் அபிஜீத் திப்கே மற்றும் அதன் தலைவர்களான செளரவ் தாஸ், அசுதோஷ் ரன்கா ஆகியோர் நாட்டை விட்டு வெளியேறக் கூடும் என்ற அச்சத்தின் பேரில், அவர்களுக்கு எதிராக 'லுக்-அவுட்' சுற்றறிக்கைகளை (lookout circulars) மும்பை காவல்துறை பிறப்பித்துள்ளதாக 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ், செய்தி வெளியிட்டுள்ளது.

மும்பையின் சிவாஜி பூங்காவில் 4,000-க்கும் மேற்பட்டோர் திரண்டு போராட்டம் நடத்திய மறுநாளான அக்டோபர் 3 அன்று, அவர்கள் மீது மும்பை காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. இந்தப் போராட்டத்திற்கு காவல்துறை அனுமதி மறுத்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

விழி நீர்த் தீபங்களால்... தொடர்ச்சி...

விதைகள் ஈழ மண்ணில் மீண்டும் மீண்டும் முளைத்துச் செழிக்கின்றன. ஈழ மக்களின் இதயங்களில் எழுதப் பட்டிருக்கும் இந்த விடுதலை வேட்கையை எவரால் அழிக்க முடியும் என்ற கேள்வியை உலகெங்கும் வாழும் ஈழத் தமிழ் மக்கள் மீண்டும் உணர்த்தியிருக்கிறார்கள். மாவீரர் துயிலும் இல்லங்களில் ஏற்றப்பட்ட ஒவ்வொரு தீபங்களும் இன்னும் அணையாத விடுதலைக் கனவை எம் நெஞ்சங்களில் ஏற்றியுள்ளன.

இந்தியாவின் பிரதான... தொடர்ச்சி...

முடக்குவதாகவோ குற்றம் சாட்டி, அக்கட்சியினர் கடந்த வாரம் அந்நிறுவனத்தின் அலுவலகங்களுக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிலைமையைச் சீர்செய்யும் நோக்கில், செவ்வாய்க்கிழமை(25) அன்று மெட்டா நிறுவன அதிகாரிகள் காங்கிரஸ் தலைவர்களைச் சந்தித்தனர். அப்போது, மெட்டா நிறுவனம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பாரதிய ஜனதா கட்சிக்குச் சாதகமாகச் செயல்படுவதாக காங்கிரஸ் தரப்பினர் குற்றம் சாட்டினர்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இந்திய அரசு தனது தகவல் தொழில்நுட்ப விதிகளில் திருத்தம் கொண்டு வந்தது. இதன்படி, நீதிமன்ற உத்தரவு அல்லது அரசு வழங்கிய எழுத்துப்பூர்வ அறிவிப்பின் பேரில் நீக்கப்பட்ட உள்ளடக்கத்திற்கு "முற்றிலும் ஒத்த" (exactly identical) பதிவுகளைத் தடுப்பதற்கு, பெரிய சமூக ஊடக நிறுவனங்கள் "தானியங்கி கருவிகள் உட்பட" பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

உள்ளடக்கத்தைக் கட்டுப்படுத்தும் போது, இந்தியச் சட்டங்களுக்கு உட்பட்டே செயல்படுவதாக மெட்டா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் பாதியில் மட்டும் இந்தியாவில் 5.4 மில்லியனுக்கும் அதிகமான பதிவுகள் மற்றும் கணக்குகளை மெட்டா நிறுவனம் கட்டுப்படுத்தியுள்ளது. இது முந்தைய ஆண்டின் (2025) மொத்த எண்ணிக்கையான சுமார் 70,000-ஐ விட மிக அதிகம்.

இந்தியாவில் 1.1 பில்லியனுக்கும் அதிகமான இணையப் பயனர்கள் உள்ளனர்; இது மெட்டா நிறுவனத் தின் மிகப்பெரிய சந்தையாகும்.

கடந்த ஆகஸ்ட் மாதம், பிரதமர் மோடி பதிவிட்ட காணொளி ஒன்று தற்காலிகமாக நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்திய நாடாளுமன்றக் குழுவிடம் மெட்டா நிறுவனம் மன்னிப்பு கோரியிருந்தது. பயனர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், தெற்காசிய நாடான இந்தியா ஃபேஸ்புக்கின் மிகப்பெரிய சந்தையாக உள்ளது.

நான் பலமுறை... தொடர்ச்சி...

கூறலை வெறும் உள்நாட்டு விவகாரமாகவோ அல்லது தோல்வியடைந்த உள்நாட்டுப் பொறிமுறைகளிடம் ஒப்படைக்கக்கூடியய ஒன்றாகவோ இனியும் கருத முடியாது. உள்நாட்டு விசாரணைகள் தொடர்ச்சியாகப் பயனற்றுப் போயுள்ள நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையானது வெறும் அறிக்கைகளோடும் தீர்மானங்க ளோடும் நின்றுவிடாமல், சுயாதீனமான சர்வதேச விசார ணைப் பொறிமுறையை வலுப்படுத்தி, சர்வதேச குற்ற வியல் நீதிமன்றத்துக்கு இலங்கையின் விவகாரத்தைப் பரிந்துரைப்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

மேலும், இலங்கை அரசாங்கம் ரோம் சட்டத்தில் இணைவதோடு, போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை உள்நாட்டுச் சட்டங்களில் உள்வாங்க வேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் தொடர்ச்சியான மௌனப் போக்கைக் கருத்திற்கொண்டு, சர்வதேச சமூகம் இனியும் காலம் தாழ்த்தாமல் குறிப்பிட்ட இலக்குகளைக் கொண்ட தடைகள், உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழான வழக்குத் தொடரல்கள் மற்றும் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் இலங்கைப் படையினரை இணைப்பதற்கு முன்பான கடுமையான மனித உரிமைப் பின்னணி ஆய்வுகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

அரசாங்கம் உண்மையை மறைத்தாலும், நீதியைத் தாமதித்தாலும், சர்வதேச நீதிப் பொறிமுறையின் ஊடாக முன்னெடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகளே பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பரிகாரத்தையும், எதிர்காலத்தில் இத்தகைய இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்கள் நிகழாமலிருப்பதற்கான உத்தரவாதத்தையும் வழங்கும்.

இல்லையெனில், அடுத்துவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் மீண்டும் ஐ.நாவின் ஆய்வறிக்கையை நிராகரிப்பதாகக் கூறிவிட்டு அமைதியாகவே இருக்கும். அது பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மீண்டும் 'நாம் பலமுறை இறந்தேன்' என்ற எண்ணத்தையே ரணமாகத் தோற்றுவித்து நிற்கும்.

• • •



இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .

சிறுவர் ஆக்கம்

அம்மா

தூரிகையால் வர்ணம் பூசி வரைந்து
விட்ட கோடு அவள் !
ஆனால் என்ன நிறம் என்று
சொல்லுவேன் ...

கோவத்தில் சிவப்போ
புன்னகையில் மஞ்சளோ
பயத்தில் கருப்போ
வெட்கத்தில் இளம்சிவப்போ
அழுகையில் நீலமோ !

அன்பில் செம்மஞ்சளோ
பொறுமையில் பச்சையோ
நேர்மையில் வெள்ளையோ!

எது அவள்?

என் கற்பனையில் எல்லா
வர்ணங்களும் கூடி நிறமெடுத்தவள்
அவள் ....



சு.திகழினி
கன்னியா

பேராசையின் விதம்

ஒரு கிராமத்தில் ஆறுமுகம் என்ற அப்பாவும் கவின் என்ற மகனும் வாழ்ந்து வந்தார்கள் .
ஆறுமுகத்திற்கு நிறைய பணமும் சொத்துக்களும் சேர்க்க வேண்டும் என்ற ஆசை. கவினுக்கு கல்வி கற்று அதில் சாதிக்க வேண்டும் என்ற ஆசை.
இருவரும் தங்கள் ஆசையை நோக்கி செல்ல தொடங்கினர்.

ஆறுமுகம் மக்களிடம் பணம் கடன்கொடுத்து அதிக வட்டி கூறி அதன் மூலமாக பணம் சேமித்தார். பணம் திருப்பி கொடுக்க முடியாதவர்களிடம் அவர்களுடைய சொத்துக்களை வாங்கினார்.

கவினோ கடினமாக படித்தான். ஒவ்வொரு பரீட்சைகளிலும் அதிக புள்ளிகளை பெற்று முதலிடம் பிடித்தான். கல்வியில் மட்டுமில்லாமல் விளையாட்டுத்துறை, நுண்ணறிவு துறையிலும் சிறந்து விளங்கினான். பல மொழிகளையும் கற்று தேர்ந்தான்.

ஆறுமுகம் அதிக பணம் சேமித்து பெரிய பணக்காரராக வந்தார். இதனால் இன்னும் அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்று பங்குசந்தையில் பணத்தை முதலீடு செய்தார். இதன்மூலமாக ஆரம்பத்தில் அதிக பணத்தை பெற்றாலும் சிறிது காலம் செல்ல செல்ல பங்குச்சந்தையில் வீழ்ச்சியை சந்திக்க தொடங்கினார். சிறிது காலத்தில் மீண்டும் இலாபம் வரும் என்று நம்பி எல்லா பணத்தையும் முதலீடு செய்து இறுதியில் எல்லாவற்றையும் இழந்தார்.

கவின் தனது திறமையால் ஒரு நிறுவனம் ஒன்றை நிறுவினான். அதன் மூலமாக பல துறைகளில் முன்னேறினான். தன்னைப்போல கல்வியில் ஆர்வம் உள்ள பிள்ளைகளின் கல்விக்கும் உதவினான்.

இருவரும் தங்களுடைய ஆசையில் பேராசை கொண்டவர்கள் தான் . ஆனால் நாம் கொண்ட பேராசை சரியானதாக இருந்தால் எல்லாம் நல்லதாக அமையும்.

செ.தச்சாயினி
பாலையூற்று

காலநிலையால் பாதிப்படையும் மாணவர்கள்

இன்று உலகம் முழுவதும் காலநிலை மாற்றம் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. இதனால் அதிகம் பாதிப்படைபவர்கள் சிறியவர்களும் மாணவர்களுமே ஆவர். மழை, வெள்ளம், வறட்சி, அதிக வெப்பம் போன்ற காலநிலை மாற்றங்கள் மாணவர்களின் கல்வியையும் உடல் நலத்தையும் மன நலத்தையும் பெரிதும் பாதிக்கின்றன. இதனை பற்றி நோக்குவோம்.

காலநிலை மாற்றத்தால் கனமழை, வெள்ளம் மற்றும் புயல் போன்றன ஏற்படுகின்றன. இதன் காரணமாக பல பாடசாலைகள் மூடப்படுகின்றன. வீதிகளில் நீர் தேங்கி நிற்பதால் மாணவர்களால் பாடசாலைக்குச் செல்ல முடியாமல் போகிறது. சில இடங்களில் பாடசாலைக் கட்டடங்களும், புத்தகங்களும், பாட உபகரணங்களும் வெள்ளத்தில் அழிந்து விடுகின்றன. இதனால் மாணவர்களின் கல்வி தடைப்படுகிறது.

மேலும் அதிக வெப்பம் மாணவர்களை மிகவும் பாதிக்கிறது. வெயில் அதிகமாக இருக்கும் நாட்களில் வகுப்பறையில் இருக்க முடியாமல் மாணவர்கள் சோர்வடைகிறார்கள். பாடத்தில் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. மேலும், வெப்பம் காரணமாக தலைவலி, மயக்கம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

அதேபோல், வறட்சி காலங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. பாடசாலைகளில் குடிப்பதற்கும், கழிப்பறைக்கும் தண்ணீர் இல்லாமல் மாணவர்கள் கஷ்டப்படுகிறார்கள். சில மாணவர்கள் தண்ணீர் எடுப்பதற்காக தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது.

மேலும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் புயல், மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் மாணவர்களின் மனதில் பயத்தை ஏற்படுத்துகின்றன. தங்கள் வீடு, பாடசாலை என்பவற்றை இழக்க நேரிடுமோ என்ற பயத்தில் அவர்கள் நிம்மதியாகப் படிக்க முடியாமல் தவிக்கிறார்கள்.

ஆகவே இந்த காலநிலை பிரச்சினைகளைத் தடுப்பதற்காக நாம் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். மரங்களை நடுதல், பிளாஸ்டிக் பாவனையைக் குறைத்தல், தண்ணீரை வீணாக்காமல் இருத்தல் போன்ற சிறிய செயல்கள் மூலம் காலநிலை மாற்றத்தைக் குறைக்கலாம். அரசாங்கம் பாடசாலைகளுக்கு பாதுகாப்பான கட்டடங்கள், சுத்தமான குடிநீர், மின்விசிறி போன்ற வசதிகளை வழங்க வேண்டும். இது போன்ற நடவடிக்கைகளால் காலநிலை மாற்றத்தை முழுமையாக தடுக்க முடியாமல் இருந்தாலும் அதிகம் பாதிப்பு ஏற்படாமல் குறைக்க முடியும் .

எனவே தொகுத்து நோக்குமிடத்து ,காலநிலை மாற்றம் என்பது மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும் ஒரு பெரிய சவாலாகும்.
எனவே, அவர்கள் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் படிக்கக் கூடிய சூழலை உருவாக்குவது நம் அனைவரின் கடமையாகும்.

மு.சந்தியா
செல்வநாயகபுரம்

கனவு

இரவில் வரும் கனவல்ல
நான்,
இரவிலும் என்னை
தூங்கவிடமால் செய்யும்
கனவு...
தூங்கும் போது மறைந்து
போகும்,
விழித்த பின்னும் வாழ்ந்திடும்
கனவு நான்...

கனவு காண்பது தவறில்லை,
கனவை மறப்பதே தவறு,
துரத்து எவ்வளவு தூரம்
முடியுமோ துரத்து...

விழுந்தாலும், புரண்டாலும்
எழுந்து நட,
கனவை நனவாக்கி
வெற்றியை மகுடமாக்கி
கொள்...



சி.கிருத்திகா
அன்புவழிபுரம்



தாயகமும் வாழ்வும்

